பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

இனிது ரகசியம் அல்ல!

எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்கு என்ற சிக்கல் நீடிக்கின்றது.

அதனால் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தை யார் பயன்படுத்துவது என்ற இழுபறியும் தொடருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தனக்கென்று பக்கம் 02

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 12 | வியாழக்கிழமை 27.12.2018 | கதிர் 52

எதிர்க்கட்சித் தலைமையில் கண் வைக்கின்றது ஜே.வி.பி.

பொறுப்புடன் செயற்பட்டுக் காட்டுவோம் எனச் சவால்

கொழும்பு, டிசெம்பர் 27

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மக்கள் விடுதலை முன்னணிக்கு வழங்கிப் பாருங்கள். நாங்கள் உரிய கடமையைச் செய்து காட்டுகின்றோம்.

- இவ்வாறு சவால் விடுத்துள்ளார் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா.

பக்கம் 11

சண். குகவரதன் கைது

கொழும்பு, டிசெ. 27

ஜனநாயக மக்கள் முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சண்.குகவரதன், கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

72 மில்லியன் ரூபா பெறுமதியில் பக்கம் 11

சு.கவுக்கு ஆப்பு வைத்த மொட்டு பெரும் குழப்பத்தில் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ. 28

எதிர்காலத் தேர்தல்களில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன், இதுவரை எந்த உடன்பாடும்செய்துகொள்ளப்பட பக்கம் 11

சு.கவை எவராலும் வீழ்த்த முடியாது!

கூறுகிறார் பைஸர் முஸ்தபா

கொழும்பு, டிசெ. 27

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தற்போது காணப்படும் நெருக்கடிகளை மையப்படுத்தி எவராலும் கட்சியைப் பலவீனப்படுத்தவோ, பக்கம் 11

ஆழிப்பேரலையில் காவுகொண்ட உறவுகளை நினைந்துருகி சோகமயமானது தமிழர் தாயகம்!

கல்லறைகளைக் கட்டியணைத்து சொந்தங்கள் கதறல்

(மேலும் செய்திகள் 5ஆம், 9ஆம் பக்கத்தில்)

யாழ்ப்பாணம், டிசெ.27

'சுனாமி' எனும் ஆழிப் பேரலை கோரத்தாண்டவத்தில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து தமிழ் பேசும் மக்களின் தாயகமானவடக்கு,கிழக்கு உட்பட நாடெங்கிலும் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

பக்கம் 11

விரைவில் மூவருக்கு பிரதியமைச்சுப் பதவி

கொழும்பு, டிசெ. 27

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் மூவருக்கு பிரதியமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது என தெரிய வருகின்றது.

இதன்படி முஜிபூர் பக்கம் 11

50 நாள்களுக்குள் நாட்டை நாசமாக்கினார் மஹிந்த!

சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 27

50 நாள்கள் அரசியல் நெருக்கடியின்போது, பிரதமராகப் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து விட்டார் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

வறிய பக்கம் 11

நாளை கிளிநொச்சி வருகின்றார் ரணில்



கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் வெள்ள இடர் நிலைமைகளை ஆராய்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை பக்கம் 11

வன்னியில் மீண்டும் கன மழை!

இரணைமடுவின் 9 வான் கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று அதிகாலை முதல் மீண்டும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பக்கம் 11

இடரினால் பாதிக்கப்பட்டோருக்கு தமிழ் மக்கள் கூட்டணியினர் உதவி

யாழ்ப்பாணம், டிசெ. 27

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்குத் தமிழ் மக்கள் கூட்டணியின் சார்பில் நேற்று உதவிப் பக்கம் 02

வடக்கு வெள்ள இடரால் 90 ஆயிரம் பேர் நிர்க்கதி!

யாழ்ப்பாணம், டிசெ. 27

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால், 28 ஆயிரத்து 806 பக்கம் 02

நாடாளுமன்றச் செயற்பாடுகளிலும் சர்வதேசம் தலையிடும் அபாயம்!

கூக்குரலிடுகிறது மஹிந்த தரப்பு

கொழும்பு, டிசெ. 27

இலங்கை நாடாளுமன்றச் செயற்பாடுகளிலும்சர்வதேசம்தலையிடும் அபாயம் ஏற்படுள்ளதாக,நாடாளுமன்றஉறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர் பக்கம் 11

ஜனாதிபதியைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டப்படவில்லை!

மகாநாயக்க தேரர்களிடம் ஐ.தே.க. விளக்கம்

கொழும்பு, டிசெ. 27

ஜனாதிபதியைக் கொலைசெய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்படவில்லை என்று அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். பக்கம் 11

இழுத்து மூடப்பட்டது சு.க. தலைமையகம்!

கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, டிசெ. 27

கொழும்பு,டார்லிவீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகம் இழுத்துமூடப்பட்டுள்ளது.

சு.கவின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோ பக்கம் 11

குளத்தில் நீராடச் சென்ற குடும்பத் தலைவர் சாவு

மணியந்தோட்டத்தில் துயரம்

யாழ்ப்பாணம், டிசெ. 27

குளத்தில் குளிக்கச் சென்ற குடும்பத் தலைவர் நீரிழ் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராசன் குலேந்திரன் (வயது-34) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். பக்கம் 11

காலைக்கதிர் Kalaikkathir

இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவானால் அந்த அலுவலகத்தில் உடனே போய் அமர்வதற்கு மஹிந்த ராஜபக்ஷ தயாராக இருக்கின்றார் என்று தகவல்.

இதுவரை அந்த அலுவலகத்தையும் ஊழியர் ஆளணியையும் பயன்படுத்தி வந்தவர் சம்பந்தன். தமிழ்க் கூட்டமைப்பினரின் கொழும்புக் கூட்டங்கள் எல்லாம் அங்குதான் நடைபெறுவது வழமை.

ஆனால் இந்தப் பதவிக்கு சர்ச்சை வெடித்த பின்னர் சம்பந்தன் அங்கு செல்வதில்லை. அவரும் அதனைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து வருகின்றார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியேக பூர்வ அலுவலகத்துக்கு அப்பால், இன்னொரு விடயமும் உண்டு. அது எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லம்.

இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது இல்லமாகப் பயன்படுத்தும் கொழும்பு பஜெட் வீதி இல்லத்துக்குப் பக்கத்திலேயே எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லமும் உள்ளது.

சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்று சுமார் ஒரு வருடத்தின் பின்னர்தான் அங்கு சென்று குடியேறினார். அதுவரை கொழும்பு – 7 இல் எம்.பிக்களுக்கு என ஒதுக்கப்பட்ட – அடுக்கு மாடியில் உள்ள – ஓர் ஒண்டுக் குடித்தன வீட்டைத்தான் அவர் பயன்படுத்தி வந்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லம் திருத்தப்பட்டுத் தமக்குக் கையளிக்கப்படும் வரை சுமார் ஒரு வருடம் காத்திருந்துதான் அங்கு போய் சம்பந்தன் தங்க முடிந்தது.

இப்போது, எதிர்க்கட்சித் தலைவர் பதவி மஹிந்தவுக்குக்கிடைத்தாலும், எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தை மட்டுமே அவர் பயன்படுத்துவார்.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தை அவர் நாட மாட்டார் என்று அவருக்கு நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

மஹிந்தர் இப்போது பயன்படுத்தும்கொழும்புவிஜேராம வீதி இல்லத்தை விட, சம்பந்தன் இப்போது குடியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவரின் இல்லம் விசாலமானது. வசதி, வாய்ப்புகள் அதிகம் கொண்டது. ஜனாதிபதி இப்போது இருக்கும் இல்லத்துக்குப் பக்கத்திலும் உள்ளது.

ஆனால், அங்கு போக மஹிந்தர் விரும்பவில்லையாம்.

"பாவம் சம்பந்தன். நீண்ட காலம் காத்திருந்துதான் இந்த உத்தியோகபூர்வ இல்லத்துக்குக் குடிவந்துள்ளார்.

இந்த நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலம் இன்னும் ஒன்றரை ஆண்டுகள்தாம். அதற்கு இடையில் அவரை ஏன் குழப்ப வேண்டும்? நான்தான் எதிர்க்கட்சித் தலைவர் என்றாலும் இப்போது விஜேராம மாவத்தையில் உள்ள வீட்டிலேயே தொடர்ந்து தங்குவது தான் நல்லது." – என்று குறிப்பிட்டிருக்கின்றார் மஹிந்தர்.

சம்பந்தனின் சாதகத்தில் பந்தாம் வீட்டில் வியாழன் (குரு) இல்லைப் போலும். அதனால் அவன் பதியை விட்டு அவரைக் கிளப்ப மாட்டான்...!

- மின்னல் -

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் முன்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்!

தம்மைப் பதவி நீக்கவேண்டாம் எனக் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 27

வடக்குமாகாணத்தில்பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சிவில்பாதுகாப்புத்திணைக்களத்தின் கீழ் ஊதியம் பெறும் முன்பள்ளி ஆசிரியர்கள்தொடர்ந்தும்தம்மை அந்தத்திணைக்களத்தின் கீழேயே பதவிவகிக்க அனுமதிக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக நேற்று ஒன்று கூடிய கவனயீர்ப்பில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்கள், ஆளுநர் றெஜினோல்ட் குரேயைச் சந்தித்து தமது பிரச்சினைகள் தொடர்பில் கூறியனர்.

அந்த சந்திப்பின்போது முன்பள்ளிஆசிரியர்கள்தெரிவித்ததாவது:

முன்பள்ளி ஆசிரியர்களாகச் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளாகப் பணியாற்றி கடன்களைப் பெற்ற நிலையில், தற்போது திடீரென ஜனவரியுடன் பதவி நீக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் எமது குடும்ப நிலைமை கருதி தொடர்ந்தும் பணியாற்ற அனுமதிக்கவேண்டும். வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் எம்மைப் பணிநீக்கம் செய்ய வேண்டாம். ஏனெனில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 13 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 322 பேரும் முல்லைத்தீவுமாவட்டத்தில் 173 பேரும் முன்பள்ளி ஆசிரியர்களாகபணியாற்றுகின்றோம்.

இவ்வாறு பணியாற்றும் எமக்கு 32 ஆயிரம்ரூபாசம்பளம் பெறும் நிலையில் அதனை நம்பியே வங்கிக்கடனைப்பெற்றோம். எனவே எமக்கான பணியை நீடிக்க அனுமதித்து அதே சம்பளத்தை தொடர்ந்தும் வழங்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் படையினரின்கீழ்இயங்கும் முன்பள்ளிகளை நிறுத்துமாறு கோருகின்றனர். அவ்வாறு நிறுத்துவதைத்தடுக்கவேண்டும் – என்றனர்.

இதன்போதுஜவர்ஆளுநரைச் சந்தித்து தமது கோரிக்கை மனு ஒன்றினை கையளித்தனர்.

இதேநேரம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற வடக்கு – கிழக்குக்கான அபிவிருத்திச் செயலணிக் கலந்துரையாடலில் வடக்கில் படைக் கட்டுமானத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகள் சர்வதேசத்துக்குத் தவறான செய்தியைக் கொடுப்பதுடன் வடக்கு மாகாண முன்பள்ளி நியதிச் சட்டத்தை மீறுவதாகவும் உள்ளதால்அவற்றைக்கல்வித்திணைக்களத்திடம் ஒப்படைத்தே ஆக வேண்டும்என்றகோரிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்வைத்துள்ளனர்.

எனவே, அவர்களிடம் தான் நீங்கள் கேட்டவேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரேமுன்பள்ளிஆசிரியர்களிடம் தெரிவித்தார். (ஐ-07)

வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்களைச் சேர்ந்த 90 ஆயிரத்து 402 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

இந்த இடரால் பாதிக்கப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 842 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 905 பேர் 26 இடைத்தங்கல் முகாங்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 50 ஆயிரத்து 288 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சில் தலா ஒருவர் என இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நேற்றுப்புதன்கிழமை மாலை 6 மணிவரையான நிலைவரப்படி இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 488 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 774 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 755 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 138 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 512 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 713 பேர் இடம்பெயர்ந்து 10 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 82 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 681வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 291 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 443 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 3 வீடுகள் முழுமையாகவும் 72 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 409 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 467 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 986 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 588 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 843 பேர் 6 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 20 வீடுகள் முழுமையாகவும் 99 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளைபிரதேசசெயலர் பிரிவில் 7 ஆயிரத்து 665 குடும்பங்களைச்சேர்ந்த 24 ஆயிரத்து 980 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 701குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 165 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

அவர்கள் 5 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் வெள்ளத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 141 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 599 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 143 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 2 வீடுகள் முழுமையாகவும் 172 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பச்சிளைப்பளை பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 188 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 179 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 13 குடும்பங்களைச்சேர்ந்த 38 பேர் ஒரு தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 109 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மன்னார்நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

நானாட்டன் பிரதேச செயலர் பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம்

மருதங்கேணிபிரதேசசெயலர் பிரிவில் 4 ஆயிரத்து 257 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 642 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். தொழில்முயற்சிகள் இரண்டு அழிவடைந்துள்ளன.

வவுனியாவடக்கு பிரதேச செயலர் பிரிவில் 152 குடும்பங்களைச் சேர்ந்த 516 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 20 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் 2 இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதேசத்தில் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ஐ)

இடரினால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் வழங்கப்பட்டன.

தமிழ் மக்கள் கூட்டணி நிறுவுநரும் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், முன்னாள் மாகாண அமைச்சர் பொ.ஐங்கரநேசன், அருந்தவபாலன் உள்ளிட்ட கட்சியின்உறுப்பினர்கள் இந்த உதவிப் பொருள்களை மக்களிடம்கையளித்தனர்.

இன்று திடீரென வந்த ஒரு தப்பான தகவலினால் அங்கிருந்து மக்கள்தலைதெறிக்கஓடவிழைந்ததைக்கண்டேன். உடையார்கட்டு அணை உடைந்து வெள்ளம் பாய்கின்றதுஎன்றதப்பானசெய்தியைக் கேட்டு பலர் இங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். ஆனால் விசாரித்துப் பார்த்ததில் அது தப்பான தகவல் என்று அறிய நேர்ந்தது.

இவ்வாறான தருணங்களில் பொறுப்புடனும் பொறுமையுடனும் நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். எமது நிவாரண நிகழ்வைத் தடை செய்ய இவ்வாறான தப்பான செய்திகள் தரப்பட்டிருக்கலாம் என்று தமிழ் மக்கள் கூட்டணி நிறுவுனரும் செயலாளர் நாயக முமான நீதியரசர்க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த காலங்களில் போரின் நிமித்தம் மோசமாகப் பாதிக்கப்பட்டு அவற்றின் தாக்கங்களில் இருந்துவிடுபடமுன்னர்இயற்கையின் சீற்றம் மீண்டும் எம் மக்களுக்குத் துன்பத்தைக் கொடுத்திருப்பதுஎமக்குமிகவும்வேதனை அளிக்கிறது.

போர்க் காலங்களில் பல்லாயிரக்கணக்கில் இடம் பெயர்ந்தது போலமீண்டும்பல்லாயிரக்கணக்கில் அவர்கள் இடம்பெயர நேர்ந்துள்ளது. தமக்குக் கிடைத்த சொற்ப உதவிகள் மூலம் சிறுகச் சிறுக அவர்கள் கட்டி எழுப்பிய வாழ்வாதாரச் செயற்பாடுகளை மழை வெள்ளம் சின்னாபின்னமாக்கியுள்ளதாக அறிந்து மனவருத்தம் அடைந்தோம்.

எமது மக்களின் துயரங்களைத் தீர்ப்பதற்கு எம்மால் முடிந்தளவுக்குநடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். சென்ற முறை அவர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது 2015 இல் எமது அமைச்சர் ஐங்கரநேசன் ஊடாக நிவாரணங்கள் வழங்கி இருந்தோம். இன்றும் வழங்குகின்றோம். தொடர்ச்சியாக நாங்கள் அவர்களுடன் இருப்போம்.

கிளிநொச்சிமற்றும்முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு மேலும் உலர் உணவுகளை வழங்க உத்தேசித்துள்ளோம். தற்காலிகமான அவர்களின் இன்றைய நிலையைக் கடந்து செல்லவே எமது நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால்நிவாரணங்களுடன் நின்று விடாமல் அவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலைவரவேண்டும். அதற்கு தன்னம்பிக்கை அவசியம். சுய முயற்சிகளால் உயர வேண்டும் என்று அவர்கள் நினைப்பது அவசியம்.

இப்போது ஏற்பட்டுள்ள இந்த வெள்ளம் காரணமாக பெரும் தோற்று நோய், தொற்றா நோய் ஆபத்தும் சுகாதாரச் சீர்கேடும் ஏற்படும் வாய்ப்பு இருக்கின்றது. இதுதொடர்பில் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் மற்றும் மருத்துவர்களுடன் ஆலோசனை நடத்தி எத்தகைய முற்பாதுகாப்புநடவடிக்கைகளை எடுக்கலாம் என்று ஆராய விருக்கின்றோம்.

அடுத்து மக்களின் வாழ்வாதாரங்கள்பாதிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் விவசாயம் அழிவடைந்துவிட்டது. கால் நடைகள் இறந்துவிட்டன. வாழ்வாதாரங்கள் தடைப்பட்டுள்ளன. சில குடும்பங்களுக்கேனும் உலர் உணவுகள் கொடுத்திருப்பது தற்போதைய அவர்களின் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காகவே. இந்த நிவாரணப்பணியில்யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவ மாணவியரும்தமிழ் மக்கள் கூட்டணியுடன்இணைந்துதங்கள்சேவையை வழங்கி வருகின்றார்கள்.

அத்துடன் தமிழ் மக்கள் கூட்டணியின் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் அணியும் தங்கள் சேவையை வழங்கி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எமக்குக் கிடைக்கும் அனைத்துப் பொருள்களும் தேவையிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்றடைய வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். றெஜியின் தலைமையிலான எமது இளையோர்கள் இதனை உறுதி செய்ய வேண்டும். அன்புடனும் பொறுப்புடனும் சுயநலம் களைந்து சேவை மனப்பான்மையுடன் நாம் உதவிப்பணிகளில் ஈடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளேன்.

காலையில் கிளிநொச்சி பிரபந்தனாறு – மயில்வாகனபுரம் இந்துதமிழ்க் கலவன் பாடசாலையில்உதவிகள் வழங்கிய பின்னர் அதனைத்தொடர்ந்து மாங்குளம் மகாவித்தியாலயத்திலும் மற்றும் இரணைமடுவிற்கு அருகில் உள்ள இந்துபுரத்திலும் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்டஎம்மக்கள்பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். பராமரிக்கப்பட வேண்டியவர்கள். எமது கடமைகளை நாம் எமது கட்சி ரீதியாகச் சுறுசுறுப்புடன் செய்வோம். கட்டுப்பாட்டுடன் செய்வோம். மனித நேயத்துடன் செய்வோம். கொடைகள் யாவும் தேவையுடைய மக்களுக்கு முழுமையாகச் சென்றடைய நாங்கள் எம்மால் ஆன மட்டில் முயல்வோம்.

விரைவில் கட்சி ரீதியாக, உத்தியோகபூர்வமாக மக்கள்யாவரையும் சந்திப்பேன் – என்றார். (ஐ)

முட்டாள் கருத்துக்கு பதிலளிக்கமாட்டேன்

கணபதிக்கு திகாம்பரம் சாட்டையடி

கொழும்பு, டிசெ. 27

முட்டாள் தனமான கருத்துகளுக்கு பதிலளிக்கமாட்டேன். – என்று அமைச்சர் பழனி திகாரம்பரம் தெரிவித்தார்.

இ.தொ.காவின் உபதலைவர் கணபதி கனகராஜுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே அவர் மேற்படி கருத்தை முன்வைத்தார்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சராக பழனி திகாம்பரம் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர் –

கூட்டு ஒப்பந்தப் பேச்சுகளிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெளியேற வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கையாக இருக்கின்றது. இதை தான் வலியுறுத்தியிருந்தேன்.

இதுதொடர்பில் கணபதி கனகராஜ் என்பவர் விளக்கம் கேட்டுள்ளார். அன்று கூட்டு ஒப்பந்தத்தை அடிமை சாசனம் என்று விமர்சித்த அவர் இன்று விளக்கம் கோருவது புரியாத புதிராக இருக்கின்றது. முட்டாள் தனமான கருத்துகளுக்கு நான் பதிலளிக்கமாட்டேன்.

மலையக மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். இனியும் எடுப்பேன். நிறுத்தப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

அதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போலி பிரசாரம் முன்னெடுத்துவருகின்றது. இருந்தாலும் சம்பளப் பிரச்சினைக்காக தொழிலாளர் நலன்கருதி இணைந்து செயற்பட நாம் தயாராகவே இருக்கின்றோம். – என்றார்.

இந்நிகழ்வில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன், நுவரெலியா நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜா, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எம். உதயகுமார், சரஸ்வதி சிவகுரு, அமைச்சின் செயலாளர், அமைச்சின் உத்தியோகஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஜ)

மஹிந்தவிடம் பணம் வாங்கியதை முடிந்தால் நிரூபித்துக் காட்டுங்கள்

வியாழேந்திரன் எம்.பி. சவால்

கொழும்பு, டிசெ. 27

மஹிந்தவுடன் இணைவதற்குப் பணம் பெற்றுக்கொண்டேன் எனப் போலிப் பிரசாரங்களைச் செய்வதைத் தவிர்த்து, முடியுமாயின் அதனை நிரூபித்துக் காட்டுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் சவால் விடுத்துள்ளார்.

தன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: –

நான் மஹிந்தவோடு இணைந்து கொண்டேன் என்று கூறுகின்றவர்கள் முதலில் அதனை நிரூபிக்கவேண்டும். நான் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவருடன் இணைந்து அவர் தலைமையிலான அமைச்சரவையிலேயே அங்கம் வகித்தேன்.

அரசியலுக்கு வந்த பிறகும் தொழில் செய்தே நாங்கள் வாழ்கிறோம். முன் கதவால் சென்று பதவி பெற்றது உண்மை. அது ஒருவேளை கையூட்டாகத் தெரியலாம். அது மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே. இவ்வாறு என்னை நோக்கி கைநீட்டுபவர்கள் கடந்த காலங்களில் தாங்கள் சந்தித்த விமர்சனங்களை ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

என்னைத் துரோகி என்று கூறுமளவுக்கு நான் யாரையும் காட்டியும் கொடுக்கவில்லை. யாரையும் கடத்தவுமில்லை. யாரையும் கொலை செய்யவுமில்லை. என் இனத்தின் நிலத்தையும் வளத்தையும் காட்டிக்கொடுக்கவுமில்லை. கிழக்கில் ஒரு தலைமைத்துவம் வந்தால் சிலர் இலகுவாகத் துரோகிப் பட்டம் வழங்கிவிடுவது இயற்கையாகிவிட்டது – என்றுள்ளது. (ஜ)

நேற்று அதிர்ந்தது கிராண்ட்பாஸ் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு!

மூவர் படுகாயம்

கொழும்பு, டிசெ. 27

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நால்வர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹேனமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய தினேஷ் எரங்க என்பவரே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கிராண்ட் பாஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

பேருந்துக் கட்டணங்கள் நள்ளிரவு முதல் குறைப்பு

கொழும்பு, டிசெ. 27

பஸ் கட்டணங்கள் நேற்றுப் புதன்கிழமை நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன் ரணதுங்க மற்றும் பயணிகள் போக்குவரத்துச் சங்கங்கள் ஆகிய வற்றுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சை அடுத்து இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, பஸ் கட்டணங்கள் நான்கு சதவீதத்தினால் குறைக்கப்படும் அதேவேளை, குறைந்தபட்ச கட்டணத்தில் மாற்றம் இடம்பெறாது என அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

எரிபொருள் விலை குறைப்பின் எதிரொலியாக பஸ் கட்டணங்கள் குறைக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

(ஜ)

எதிர்க்கட்சித் தலைவரின் செயலராக ஒருவரை பரிந்துரைத்த மஹிந்த அணி

அனுமதி வழங்குமா அமைச்சரவை?

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பாகக் குழப்ப நிலை நிலவும் சூழலில், மஹிந்தராஜபக்ஷதரப்பினால் எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர் பதவிக்கான பரிந்துரை அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தின் பேச்சாளரான ரொஹான் வெலிவிட்ட இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளராக நியமிக்கக் கூடிய இலங்கை நிர்வாக சேவை அதிகாரியொருவரின் பெயரைச் சிபாரிசு செய்து அமைச்சரவைக்கு அனுப்புவது வழக்கம். இதனை நாம் செய்துள்ளோம். அத்துடன் இவ்விடயம் தொடர்பாகச் சாதகமானதீர்மானம்கிடைக்குமென நாம் எதிர்பார்க்கிறோம்.

நாம் அனுப்பிய பெயர் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டால் புதிய எதிர்க்கட்சித் தலைவராக மஹிந்த ராபக்ஷவை அரசு அங்கீகரித்துள்ளதாகக் கருதப்படும். அவ்வாறான நிலையில் எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் கொழும்பு – 07 மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தையிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்துக்குச் செல்ல முடியும்.

அரசமைப்புச் சபை கூட்டம் கடந்த 21 ஆம் திகதி நடந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் மஹிந்த பிரதமருடன் அமர்ந்திருந்தார். எனவே இந்த விடயம் விரைவில் தீர்வு காணப்படும் – என்றார்.

இதேவேளை தானே இன்னும் எதிர்க்கட்சித் தலைவர் என்று கூறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், தொடர்ந்தும் கொழும்பு 07 இலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் உள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரைத் தீர்மானிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை நியமிக்க வேண்டுமென ஐ.தே.க மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்கள் கடந்த வாரம் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

நீர்வீழ்ச்சியில் இருந்து விழுந்த இருவர் மாயம்!

கொழும்பு, டிசெ. 27

பபரகம நீர்வீழ்ச்சியில் இருந்து விழுந்த இரு இளைஞர்கள் காணாமல்போயுள்ளனர்.

நேற்று முன் தினம் பிற்பகல் மணியளவில் இந்த இருவரும் பண்டாரகம, ராவண நீர்வீழ்ச்சியின் மேல் பகுதியில் உள்ள பபரகம நீர்வீழ்ச்சியில் இருந்து விழுந்துள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

20 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே காணாமல் போயுள்ளனர்.

இந்த இளைஞர்களைக் காப்பாற்ற முற்பட்ட மற்றுமொரு நபர் காயங்களுடன் பண்டாரவளை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். (ஜ)

பிணைமுறி மோசடியில் இருந்து விடுதலை பெற்றுள்ளது ஐ.தே.க.

அமைச்சர் வஜிர அபேவர்தன கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 27

மத்திய வங்கி பிணைமுறி மோசடி குற்றச்சாட்டில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி விடுவிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி விசாரணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலிப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ஜ)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

இனியும் நம்புவதற்கு இடமுண்டா?

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமரர் ஜோஸப் பரராஜசிங்கத்தின் நினைவு நாள் நிகழ்ச்சியில் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் கூறியிருக்கும் சில கருத்துக்கள் கவனிக்கத்தக்கவை.

ஏற்கனவே கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், அவரது தளபதி எம். ஏ. சுமந்திரனும் வெளிப்படுத்தி வரும் கருத்துகளுக்கு முரணிலை நிலைப்பாடுகள் இந்த நினைவுரை விடயத்தில் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றமையே முக்கிய விவகாரமாகும். அதுவே அவதானிக்கப்பட வேண்டிய விடயமுமாகும்.

நல்லாட்சி அரசின் கதை கந்தலாகி நேற்றோடு இரண்டு மாதங்களாகி விட்டன. நல்லாட்சி அரசை ஏற்படுத்துவதற்கான உடன்பாடு செத்து, அதற்குச் சமாதியும் கட்டியாகி விட்டது.

ஆனாலும் –

நல்லாட்சி அரசின் கீழ் முன்னெடுக்கப்பட்ட – இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் – இன்னும் செத்துப் போய்விடவில்லை என்ற சாரப்படவே கூட்டமைப்புப் பக்கத்தில் இருந்து செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் அடுத்த சுதந்திர தினத்துக்கு – பெப்ரவரி 4ஆம் திகதிக்கு – முன்னர் வெளிவரும், அதைத் தொடர்ந்து அதனை நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கச் செய்வதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பங்கு எம். பிக்களின் – அதாவது 150 நாடாளுமன்ற உறுப்பினர்களின் – ஆதரவைத் திரட்டக் கூடிய வாய்ப்பு இன்னும் தாராளமாகவே உள்ளது என்றெல்லாம் கூட கருத்துக்கள் கூட்டமைப்புத் தரப்பில் இருந்து கோடி காட்டப்பட்டே வந்தன.

ஆனால், நேற்று முன்தினம் மட்டக்களப்பில் சுமந்திரன் ஆற்றிய நினைவுப் பேருரை இதற்கு மாறான செய்திகளையே எமக்குச் சொல்லி நிற்கின்றது.

"பல்வேறு தடைகளுக்கு மத்தியில் இந்த நவம்பர் 07 ஆம் திகதி நிபுணர்கள் வரைந்த ஒரு முழு அரசமைப்பு வடிவம் வெளிவர இருந்தது. அதற்கு சில நாள்களுக்கு முன்னர்தான் இந்த நாட்டில் அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன.

"சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிகளைத் தடுப்பதற்காகவே இந்த அரசியல் மாற்றத்தைச் செய்தனர் எனத் தெரிவித்திருந்தனர்.

***"இந்த அரசமைப்பு வந்தால் நாடு பிளவுபடும் எனவும் பலர் கூறியுள்ளனர். இந்த அரசியல் மாற்றத்திற்கு இந்த விடயமும் ஒரு காரணியாக இருந்துள்ளது என்பதை நாங்கள் மறந்து விடக்கூடாது."* – இவ்வாறு சுமந்திரன் அந்த நினைவுரையில் கூறியிருக்கின்றார்.**

ஒக்டோபர் 26 ஆம் திகதி இடம்பெற்ற அரசியல் மாற்றத்திற்கு – அரசியல் சூழ்ச்சிக்கு – பிரதான சூத்திரதாரி இந்த நாட்டின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான். அதில் யாருக்கும் எள்ளளவேனும் சந்தேகம் கிடையாது.

இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு முயற்சியைத் தடுப்பதும் அந்த அரசியல் சூழ்ச்சித் திட்டம் அரங்கேறக் காரணம் என்றால், அந்தப் புதிய அரசமைப்பு வருகின்றமையை எதிர்க்கின்றவர்கள் பட்டியலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முன்னணியில் இருக்கின்றார் என்றே அர்த்தம்.

மஹிந்த ராஜபக்ஷவுடன் மீண்டும் கூட்டுச் சேர்ந்த பின்னர், இந்த நாட்டில் சமஷ்டிக்கு இடமேயில்லை, ஒற்றையாட்சியே நிரந்தரம், யுத்தத்தை வென்ற எந்த ஒரு படை வீரனையும் விசாரணை செய்ய இடமளிக்கமாட்டேன் என்றெல்லாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறுதியிட்டு அறிவித்தமையும் கவனிக்கத்தக்கது.

இது, அந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை எதிர்க்கும் – அதற்கு முட்டுக்கட்டை போடும் – தரப்புகளில் முன்னணி நிலை வகிப்பவர் நாட்டின் தலைவரான ஜனாதிபதிதான் என்பதைப் புலப்படுத்தி, உறுதிப்படுத்தி, அறுதியிட்டுக் கூறி நிற்கின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தத்தை இந்தநாட்டின் ஜனாதிபதியே எதிர்க்கின்றார், அதற்கான முயற்சிகளுக்குக் கால்தடம் போட்டு நிற்கின்றார் என்ற நிலையில் –

அந்த முயற்சி முன்நகர்வதற்கு இன்னும் வாய்ப்பு இருக்கின்றது, சந்தர்ப்பம் உண்டு, அப்படி நடக்கலாம் என்றெல்லாம் கிஞ்சித்தும் நம்புவதும், எதிர்வு கூறுவதும் வெறும் போலி வேஷங்கள்தான். அத்தகைய நம்பிக்கைகள் அபத்தமின்றி வேறில்லை.

வன்னி வெள்ள இடர் தொடர்பில் பிரதமர் செயலகத்தில் ஆராய்வு

கொழும்பு, டிசெ. 27

கிளிநொச்சியிலும் முல்லைத்தீவிலும் பெய்து வரும் மழையால் பாதிக்கப்பட்டுமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களின் நிலை தொடர்பாக அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பிரதமர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மக்களின் இடர்பாடுகள், உணவுத்தேவைகள், வாழ்விடங்களின் நிலை தொடர்பாகவும் சுகாதார தேவைகள் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அமைச்சர்களுக்குத் தெளிவு படுத்தினார்.

எமது மக்களின் இயல்புநிலை முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் தமது அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் விரக்தியில் இருப்பதாகவும், தற்போதும் கிளிநொச்சியில் கனமழை பெய்து வருவதால் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகவும், இந்த காலநிலை தொடர்ந்தால் எமது மாவட்டம் முற்றுமுழுதாக பாதிப்படையும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அமைச்சர்களுக்கு சுட்டிக்காட்டினார்.

எமது மக்களின் அவல நிலையைப் போக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான வஜிர அபேகுணவர்த்தன, அகில விராஜ் காரியவசம், ரஞ்சித் மத்தும பண்டார, பிரதமரின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

மாந்தையில் சீனக் குழுவினர்

மன்னார், டிசெ. 27

மன்னார் மற்றும் மாந்தை துறைமுகங்கள் ஊடாக இலங்கையுடன் சீனர்கள் மேற் கொண்ட பண்டைய வணிகம் தொடர்பாக, சீன மற்றும் இலங்கைத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கூட்டு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

சீனாவின் சிசுவான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வுக் குழுவினருடன், களனிப் பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் திணைக்களத்தின் குழுவினர் இணைந்து இந்த ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாந்தைத் துறைமுகம் தொடர்பாக, எந்த விரிவான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று இந்த ஆய்வுக் குழுக்களுக்குத் தலைமை தாங்கும், களனி பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி மங்கள கட்டும்பொல தெரிவித்துள்ளார்.

சீன தொல்பொருள் ஆய்வாளர்கள் அண்மையில் யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியிலும் சீன வணிகத் தொடர்புகள் குறித்த அகழ்வாய்வுகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

பாவற்குளத்துக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பொதுமக்களுக்கு எச்சரிக்கை

வவுனியா, டிசெ. 27

வவுனியா – பாவற்குளத்துக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், குளத்தின் கீழ் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியாவில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாகவும் ஈரட்டை குளத்தின் வான் பாய்ந்து வருவதனாலும் பாவற்குளத்தின் நீர்மட்டம் சடுதியாக அதிகரித்துள்ளது.

19.4 அடியாக உள்ள பாவற்குளத்தின் நீர் மட்டம்தற்போது 18.3 அடியாகஉயர்வடைந்துள்ளது. தொடர்ச்சியாக மழை பெய்யும் நிலை இருப்பதால் நீர்மட்டம் சடுதியாக உயர்வடைய வாய்ப்புள்ளது. இதன் காரணமாகக் குளத்தின் கீழான பகுதிகளில் உள்ள பாவற்குளம், மீடியாபாம், கிறிஸ்தவ குளம், மெனிக்பாம் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நீரை வெளியேற்றுவது குறித்து நீர்ப்பாசன, மாவட்ட செயலக, அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உத்தியோகத்தர்கள் குளத்தின் வான் கதவுகளைப் பார்வையிட்டு அவதானித்து வருகின்றனர் – என்றார்.

(ஐ)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவியளிப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உலர் உணவுகள், உடைகள், மருந்துப்பொருள்கள், படுக்கைவிரிப்புகள், என்பவற்றை முடிந்த அளவு சேகரித்து வழங்கும் வண்ணம் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே விடுத்துள்ள வேண்டுகோளுக்கு அமைவாக நேற்று முன்தினம் இவற்றை ஆறுதல் நிறுவனத்தினர் கண்டாவளை பதில் பிரதேச செயலாளர், ரி.பிருந்தாகரனின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எம்.பிரதீபனிடம் கையளித்தனர்.

புதுக்குடியிருப்பு செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுனர் கலந்து கொண்டார். அவ்வேளையில் தற்போது அப்பகுதி மக்களுக்குப் பின்வரும் பொருட்கள் தேவைப்படுகின்றன எனப் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

எனவே உதவி செய்யும் அன்புள் ளங்கள் இவற்றைக் கருத்திற் கொண்டு முடிந்த அளவு பொருள்களைத் தந்துதவுமாறு ஆறுதல் நிறுவனம் கேட்டுள்ளது.

நுளம்பு வலை – 914, தறப்பாள் – 485, நிலவிரிப்பு – 515, தும்புத்தடி – 7100, விளக்குமாறு – 7100, டெட்ரோல் – 2500.

(ஐ)

நாளை

28.12.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: பூரம் பி.ப 3.34 வரை
திதி : ஷஷ்டி மு.ப 11.18 வரை
சுபநேரம் : 6.28 – 7.58 வரை
இராகுகாலம் : 10.58 – 12.28 வரை

இடர் பாதித்த வன்னி மக்களை பார்வையிட்டார் வடக்கு ஆளுநர்

முல்லைத்தீவு, கிளிநொச்சிக்கு நேரடி விஜயம்

முல்லைத்தீவு, டிசெ. 27

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத் தங்கல் முகாங்களில் தங்க வைக்கப்பட் டுள்ள மக்களை வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்றுச் சந்தித்து உடனடித் தேவைகளுக்கான நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டு சுட்டான், பேராறு, மன்னங்கனட்டி, சுதந்திர புரம், மாணிக்கபுரம் பகுதிகளில் அமைந் துள்ள முகாங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, தர்மபுரம், முரசுமோட்டை, பரந்தன், ஆனந்தபுரம், முறுகண்டி உள்ளிட்ட பகுதிகளில் அமை ந்துள்ள முகாம்களையும் ஆளுநர் அதி காரிகள் சகிதம் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருள் களை வழங்கினார்.

ஆளுநர் முகாங்களைப் பார்வையிடச் சென்றபோது அங்கு அரசியல் பிரமுகர்க ளையும் சந்தித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேளமாலிகிதன், ஈ.பி.டி.பி. நாடாளு மன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சமூகநீதிக்கான அமைப்பின் தலைவர் முருகேசு சந்திரகுமார், முன் னாள் மாகாண சபை உறுப்பினர் கே.தவராசா யாழ். மாநகரசபை உப தவி சாளர் து.ஈசன், கோப்பாய் பிரதேச சபை தலைவர் நிரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த உதயகுமார் உட்பட பிரதேசசபை உறுப்பினர்களையும் சந்தித்துக் கலந்து ரையாடினார்.

மக்கள் முன்னிலையில் தமிழில் உரையாற்றிய ஆளுநர்,

உங்கள் துக்கத்தை நேரடியாகச் சென்று பார்வையிட்டுச் செய்யவேண்டிய உதவி தொடர்பில் தமக்குச் சொல்லுமாறு ஜனாதிபதி ஐயா என்னை அனுப்பியிருக் கின்றார். இன்று விடியல் காலை முதல் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது முகாங்களைப் பார்த்து வருகின்றேன்.

உங்களுக்கு வேண்டிய அனைத்து உதவியும் செய்யச் சொல்லி ஜனாதிபதி இடர்முகாமைத்துவ அமைச்சரின் செயலா ளருக்கு உத்தரவு போட்டுள்ளார். நான் அது சரியாக நடைபெறுகிறதா என்று கண் காணித்துக்கொண்டு இருக்கின்றேன். நீங்கள் வீட்டுக்குப்போன பிற்பாடு இரண்டு கிழமைக்கு உங்களுக்கு உலர்உணவு பொதிகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி இருக்கின் றேன். நீங்கள் கவலைப்படவேண்டாம். நுண்கடன் வழங்கிய நிறுவனம் நீங்கள் இடம்பெயர்ந்து இருக்கின்ற முகாங்க ளுக்கு வந்து பணம் கேட்டுக் கரைச்சல் கொடுப்பதாகக் கேள்விப்பட்டிருக்கின் றேன். அது தொடர்பில் நான் கூடிய கவ னம் செலுத்தி வருகின்றேன். அது தொடர் பில் நீங்கள் கவலை கொள்ளத் தேவை யில்லை. உங்கள் குறைகள் தொர்பாக ஆளுநர் செயலகத்துடன் தொடர்பு கொள் ளுங்கள் – என்றார்.

(ஐ)

நிவாரண சேகரிப்பில் யாழ் எப். எம் வரிசை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடமாகாண மக்களுக்கு கொடுத்து தவுவதற்கு குடிதண்ணீர்ப் போத்தல் கள், பால்மா வகைகள், பிஸ்கட் வகை கள், உலர் உணவுப் பொருள்கள், புதிய உடுபுடவைகள் போன்ற நிவா ரணப் பொருள்களை பொதுமக்க ளிடம் இருந்து சேகரிக்கும் பணியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாப னத்தின் பிராந்திய ஒலிபரப்புச் சேவை யான யாழ் எப்.எம் ஈடுபட்டு வருகிறது.

சேகரிக்கப்படும் நிவாரணப் பொருள்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

நிவாரணப்பொருள்களை வழங்க விரும்பும் பொதுமக்கள், அமைப் புக்கள் மற்றும் நிறுவனங்கள் நிவா ரணப் பொருள்களை "யாழ் எப்.எம், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தா பனம், இல – 110, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்." – என்ற முகவரி யில் கொடுத்துதவ முடியும். இலக் கங்கள் 021 321 2686 மற்றும் 0775342129 மூலம் மேலதிக தொடர் புகளைப் பெறமுடியும்.

இரணைமடுவில் குவியும் மீன்கள்

கிளிநொச்சி, டிசெ. 27

இரணைமடுகுளத்தின் வான் பகுதிக்குள் அதிகளவு மீன்கள் பிடி படுவதால் மீனவர் மகிழ்ச்சியில் உள்ளனர்.

பெருமளவானவர்கள் வான்பகு திக்குள் மீன் பிடியில் இறங்கியுள் ளனர். நூற்றுக்கணக்கான கிலோ மீன்கள் பிடிப்படுவதால் வியாபாரி களும் இரணைமடுவில் குவிந் துள்ளனர். நேற்று முன்தினம் மாத் திரம் பல ரூபாவுக்கு மீன் விற்பனை இடம்பெற்றுள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

அத்தோடு தொடர்ந்தும் வான்பகு திக்குள் பலர் மீன்பிடியில் ஈடுப்பட்டு வருகின்றனர். அவற்றை கொள் வனவு செய்வதற்கு மக்களும், வியா பாரிகளும் அங்கு குவிந்துள்ளனர்.

(ஐ)

உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் ஆழிப்பேரலை நினைவேந்தல் நேற்று

யாழ்ப்பாணம், டிசெ. 27

சுனாமிப் பேரலையால் உயிரிழந்த உறவுகளின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயாகம் எங்கும் உறவுகளால் நேற்றுக் கடைப்பிடிக் கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை சுனாமி நினைவா லயத்தில் ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு உறவுகள் மலர் தூவி, தீபம் ஏற்றி அஞ்சலித்தனர்.

(ஐ – 07)

வெளியேறியது அமெரி. கப்பல்

கொழும்பு, டிசெ. 27

கொழும்பு துறைமுகத்திற்கு கடந்த 21 ஆம் திகதி வந்த ஐக் கிய அமெரிக்காவின் கடற்படை கப்பலான ரஸ்மோர் கொழும்பு துறைமுகத்தில் இருந்து நேற்றுத் திரும்பியுள்ளது.

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு வந்துள்ள இந்த கப்பல், 380 கடற்படை வீரர்க ளைக் கொண்டுள்ளது.

6நாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்தக் குழு வினர் இலங்கைக் கடற்படை யால் ஏற்பாடு செய்த பல நிகழ்ச்சி களில் பங்குபற்றினர். இந்நிலை யில், நேற்றுக் கொழும்புத் துறை முகத்தில் இருந்து இந்தக் கப்பல் நாட்டுக்கு திரும்பியுள்ளது.

(ஐ)



தெற்கைப் போன்று வடக்கு இடருக்கும் விரைந்து உதவியளிக்கவேண்டும் அரசு!

சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ. 27

தென்பகுதியில் ஏற்பட்ட வெள்ள இடர்களில் எடுத்த துரித நடவடிக்கையை வடக்கு மாகாணத்திலும் எடுக்க வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அண்மைய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முல் லைத்தீவு மாவட்ட மக்கள் தங்கியிருந்த இடைத்தங்கல் முகாம்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ள இடருக்கு முகங்கொடுத்துள்ள மக்களுக்கு அத்தியாவசிய நிவார ணப் பொருள்களை வழங்குவதற்கு முயற்சிகளை மேற் கொண்டு பிரான்சில் இயங்கும் ரீ.ஆர்.ரீ வானொலியின் சமூகப் பணிக் குழுவினரின் பங்களிப்புடன் ஐந்து முகாம்களில் தங்கியுள்ள சுமார் 464 குடும்பங்களுக்கு நான்கு லட்சம் ரூபா செலவில் உலர் உணவுப் பொருள் களை நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் வழங்கினார்.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த மக்கள், வெள்ளத் தால் நூற்றுக்கணக்கான மாடுகளும், ஆடுகளும், ஆயிரக்கணக்கில் கோழிகளும் உயிரிழந்துள்ளன. நெற்செய்கையில் ஈடுபட்டிருந்த நாம் இந்த வருடம் நிறைவான விளைச்சலை எதிர்பார்த்திருந்தோம். குட லைக் கதிர் பிடித்துள்ள நிலையில் தற்போதைய மழை எமது எதிர்பார்ப்பில் மண்ணை அள்ளிப்போட்டுவிட்டது. அடுத்த சில தினங்களில் மழை வெள்ளம் வடிந்துவிடும். நாங்கள் வீடுகளுக்குத் திரும்பியதும் முக்கியமாக நீரைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமத்தை எதிர்கொள்ளப் போகிறோம் – என்று கூறினர்.

(ஐ)

காலைக்கதிர் Kalaikkathir

கமராவுக்கு போஸ் கொடுப்பதை நிறுத்தி விட்டு சுரங்கத்தில் சிக்கியோரைக் காப்பாற்றுங்கள்!

பிரதமர் மோடிக்கு காட்டமாக ராகுல் காந்தி தெரிவிப்பு

புதுடில்லி,டிசெ.27

கமராவுக்குப் போஸ் கொடுப்பதை விடுத்து கடந்த இரு வாரங்களாக சுரங் கத்தில் சிக்கி இருக்கும் தொழிலாளர்களை காப்பாற்றுங்கள் எனப் பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கோரிக்கை வைத்து உள்ளார்.

மேகாலயாவில் கிழக்கு ஜெயின்டியா மலைகள் மாவட்டத்தில் லட்டினி ஆற்றில் திடீரென வெள்ளம் ஏற்பட்டதால், கடந்த டிசம்பர் 13 ஆம் திகதி முதல் சுரங்கத் திற்குள் 15 சுரங்கத் தொழிலாளர்கள் சிக்கிகொண்டனர். 15 சுரங்கத்தொழிலாளர் களையும் மீட்கும் நடவடிக்கை உபகரணங் கள் இல்லாதமையால் நிறுத்தப்பட்டு உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின் றன.

சுரங்கத்திற்குள் சிக்கியிருப்பவர்களை மீட்க போதுமான அளவு பணியாளர்கள் மற்றும் உபகரணங்கள் இல்லை என்று மேகாலயாவின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி பிரதமர் மோடி கமராவிற்குப் போஸ் கொடுப்பதை விட்டு விட்டு சுரங்கத் திற்குள் சிக்கி உள்ள தொழிலாளர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்து உள்ளார்.

இரண்டு வாரங்களாக வெள்ளம் புகுந்த நிலக்கரி சுரங்கத்தில் 15 சுரங்கத் தொழிலாளர்கள் உயிருக்கு போராடி வருகின்றனர். இதற்கிடையில், பிரதமர்

போகிபீல் பாலம் மீது கமராக்களுக்கு போஸ் கொடுத்து வருகிறார். தொழிலாளர் களை மீட்க மத்திய அரசு உயர் அழுத்த நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய மறுத்து விட்டது. பிரதமர் தயவு செய்து சுரங்கத் தொழிலாளர்களைக் காப்பாற்றுங்கள் என ராகுல்காந்தி தனது டுவிட்டரில் கூறி உள்ளார்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சிறுமி 5 வருடங்களின் பின் குடும்பத்துடன் இணைவு

இந்தியாவில் கேதாரநாத் வெள்ளத்தின்போது அடித்துச் செல்லப்பட்ட – மனநலம் பாதிக்கப்பட்ட – சிறுமி, 5 வருடங்களுக்குப் பிறகு தனது குடும் பத்துடன் மீண்டும் இணைந்த நெகிழ்ச்சி சம்பவம் அலிகரில் நடந்துள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் அலிகரின் பன்ன தேவி பகுதியைச் சேர்ந்தவர்கள் ஹரிஷ் சந்த் மற்றும் சகுந்தலா தேவி. இவர்களின் மகன் ராஜேஷ் சந்த், அவரின் மனைவி மற்றும் மகள் சன்சல் ஆகியோர் கேதார்நாத்துக்கு புனித யாத் திரை சென்றனர். 12 வயது சிறுமியான சன்சல், மனநலம் பாதிக்கப்பட்டவர்.

2013 இல் அவர்கள் கேதார்நாத் சென்றபோது பெரிய அளவில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. இதில் சன்சலும் அவரின் தந்தை ராஜேஷும் அடித்துச் செல்லப்பட்டனர். சன்சலின் தாய் சில நாள்களுக் குப் பிறகு வீடு திரும்பினார். ராஜேஷ் இன்னும் வீடு திரும்பவில்லை.

சன்சல் இறந்துவிட்டார் என்று எல்லோரும் நினைத்த வேளையில், சில யாத்ரீகர்கள் சிறுமி யைக் காப்பாற்றினர். சிறுமியை ஜம்முவில் உள்ள ஓர் ஆதரவற்றோர் இல்லத்தில் சேர்த்தனர்.

தற்போது சன்சலை அவர்களின் குடும்பத்தில் மீண்டும் சேர்த்த அலிகர் சமூக சேவை அமைப் பின் இயக்குநர் ஞானேந்திர மிஸ்ரா இதுகுறித்துக் கூறும்போது, "கடந்த சில மாதங்களாக சன்சல் அலிகர் நகரத்தைப் பற்றி ஏதோ கூற முயற்சித் திருக்கிறாள். அவளுக்குள்ள குறைந்தபட்ச பேச்சுத் திறனில் இது வெளிப்பட்டுள்ளது. இதை ஆதரவற் றோர் இல்ல நிர்வாகிகள் கவனித்துள் ளனர்.

"இதனால் அவர்கள் அலிகர் சட்டப்பேரவை உறுப்பினர் சஞ்சீவ் ராஜாவுக்குத் தகவல் தெரிவித் துள்ளனர். அவர் என்னிடம் இதுகுறித்துப் பேசி னார். காவல்துறையின் உதவியுடன் சன்சலின் குடும்பத்தைக் கண்டுபிடித்தோம்" என்றார்.

"சன்சல் வீடு திரும்பியது அதிசயம்" என்ற அவரின் தாத்தா ஹரிஷ், "சன்சல் எப்போதும் காணாமல் போன தனது தந்தையின் நினைவா கவே இருக்கிறாள். அவளுக்காகவாவது என் மகன் ராஜேஷ் விரைவில் வீடு திரும்ப வேண்டும்" என்றார்.

சுனாமிப் பேரலைகளில் அள்ளுண்ட உறவுகளுக்கு அஞ்சலி

சுனாமிப் பேரலைகளில் உயிர்நீத்த உறவுகளின் பதி னான்காம் ஆண்டு நினைவு தினத்தைத் தமிழக மக்கள் நேற்றுக் காலை கடலோரத்தில் அனுஷ்டித்தபோது எடுக்கப்பட்ட படம்.

5அடி7அங்குலம் முடி வளர்த்து குஜராத் யுவதி உலக சாதனை

ஆமதாபாத்,டிசெ.27

குஜராத் மாநிலம் மோடசா பகுதியைச் சேர்ந்த நிலன்ஷி படேல் என்ற இளம்பெண் 170 செ.மீ. நீளத்திற்கு தலை முடி வளர்த்து 2019 ஆம் ஆண்டுக்கான கின்னஸ் சாதனை புத்த கத்தில் இடம்பெற உள்ளார்.

16 வயதாகும் இவர் தலைமுடியை நீளமாக வளர்ப்பதில் சிறுவயதில் இருந்தே ஆர்வமுடன் இருந்தார்.

தலைமுடியை பராமரிப்பதற்காக பிரத்தியேகமாக அவர் நேரத்தை செலவிட்டார். மேலும் தலைமுடி நீளமாக வளர்வ தற்கான முயற்சிகளையும் செய்தார்.

இதன் காரணமாக அவரது தலைமுடி நீளமாக வளர்ந்தது. தற்போது அவரது தலைமுடியின் நீளம் 170.5 சென்டி மீற்றர் (5 அடி 7அங்குலம்) ஆகும்.

இதற்கு முன்பு ஆர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்த ஏபிரில் என்ற பெண்ணின் 152.5 சென்டி மீட்டர் நீளமுள்ள தலைமுடி தான் சாதனையாக இருந்தது. பிறகு அந்த சாதனையை கெயிட்டோ என்ற பெண் 155.5 சென்டி மீட்டர் நீள தலைமுடி வளர்த்து முறியடித்தார்.

தற்போது இந்த 2 சாதனைகளையும் குஜராத் பெண் நிலன்ஷி முறியடித்து புதிய உலக சாதனை படைத்து இருக்கிறார்.

நிலன்ஷியின் இந்தச் சாதனையை கின்னஸ் சாதனை புத்தகத் தயாரிப்பாளர்கள் அங்கீகரித்து உள்ளனர். இதற்காக சமீபத்தில் நிலன்ஷி இத்தாலி சென்று அங்கீகார கடிதத்தை பெற்று வந்தார்.

பிளஸ் -1 படிக்கும் நிலன்ஷி பெற்றோருக்கு ஒரே மகள் ஆவார். இதனால் அவளை மகன் போல அவரது பெற்றோர்கள் வளர்த்து வந்தனர். 6 வயதுக்கு பிறகுதான் நிலன்ஷி தனது தலைமுடியை வளர்க்க தொடங்கினார்.

11 ஆண்டுக்குள் நிலன்ஷி தனது தலைமுடியை மிக நீள மாக வளர்த்து உலக சாதனை படைத்து உள்ளார்.

இந்தியாவில் ஐந்து கி.மீ. நீளமான இரட்டை அடுக்குப் பாலம் திறப்பு!

பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார்

அஸாம் மாநிலத்தில் இந்தியப் பணத் தில் 5,900 கோடி ரூபா செலவில் கட்டப் பட்டுள்ள – இந்தியாவிலேயே – மிக நீள மான இரட்டை அடுக்குப்பாலத்தை பிரத மர் மோடி நேற்றுத் திறந்து வைத்தார். அஸாம் மாநிலம் திப்ரூகர் முதல் அரு ணாச்சல பிரதேசம் தலைநகர் இடாநகரை இணைக்கும் போகிபீல் பாலம் 4.94 கிலோ மீற்றர் நீளம் கொண்டது. இப்பாலத் தின் மேற்புறத்தில் மூன்று வழிச்சாலை யும், கீழடுக்கில் இரட்டை அகல ரயில் பாதையும் அமைந்துள்ளன. இந்தியா வின் மிக நீளமான இந்த இரட்டை அடுக்குப் பாலமான இது, ஆசியாவி லேயே 2 ஆவது மிக நீளமான இரட்டை அடுக்குப் பாலமாகும்.

இப்பாலத்திற்கு 1997 இல் அப்போ தைய பிரதமர் தேவகவுடா அடிக்கல் நாட்டினார். பிரம்மபுத்திரா வெள்ளம் மற் றும் அரசியல் காரணங்களால் 21 ஆண் டுக்குப் பின் அது பயன்பாட்டுக்கு வந் துள்ளது. இந்தப் பாலத்தால் 170 கிலோ மீற்றர் பயண தூரமும், 4 மணி நேர பயண காலமும் குறைந்துள்ளது. முக்கிய மாக, சீன எல்லை அருகில் உள்ள அரு ணாசலப் பிரதேசத்தை இணைப்பதால், அவசர காலத்தில் டாங்கி உள்ளிட்ட

இராணுவ தளவாடங்களை வேகமாகக் கொண்டு செல்லிது உதவும். மேலும் இந்தப் பாலம் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பாலமாகக் கருதப்படுகிறது

டிரம்ப் – அமெ. மத்திய வங்கி முறுகல் பங்குச் சந்தைகளில் பெரும் வீழ்ச்சி!

அமெரிக்க அதிபர் டிரம்புக்கும், அந்நாட்டின் மத்திய வங்கியான 'ஃபெடரல் ரிசர்வுக்கும் இடையே நீடிக்கும் மோதலின் விளைவாக அமெரிக்க, ஐரோப்பிய, ஆசியப் பங்குச் சந்தைகள் பல சரிவைச் சந்தித்தன.

குறிப்பாக, கிறிஸ்மஸ் காலத்தில் இதுவரை முன்னெப்போதும் இல்லாத வீழ்ச்சியை அமெரிக்கப் பங்குச் சந்தைகள் சந்திக்கின்றன. 30 முன்னணி நிறுவனங்களின் பங்குகளை உள்ளடக்கிய டொவ் ஜோன்ஸ் பங்குச் சந்தைக் குறியீட்டெண் திங்கள்கிழமை 650 புள்ளிகள் வீழ்ந்தது. 1930 ஆம் ஆண்டு ஏற்பட்ட உலகப் பொருளாதாரப் பெருமந்தத்துக்குப் பிறகு அமெரிக்கப் பங்குச் சந்தைகளுக்கு இதுமிகமோசமானடிசம்பராக உருவெடுக்க உள்ளது.

அமெரிக்கா, ஐரோப்பா, அமெரிக்காவில் உள்ள பல நிதிச் சந்தைகள் கிறிஸ்மஸை ஒட்டி செவ்வாய்க்கிழமை மூடப்பட்டுள்ளன.

சீனாவில் ஷாங்காய் பங்குச் சந்தையின் ஒருங்கிணைந்த குறியீட்டெண் செவ்வாய்க்கிழமை காலை 2 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது. ஜப்பானின் முக்கிய பங்குச்சந்தை குறியீட்டெண் நிக்கெய் 5 சதவீதம் வீழ்ச்சியடைந்தது.

ஃபெடரல் ரிசர்வ். – டிரம்ப் மோதல், அமெரிக்க அரசுச் செயல்பாடுகள் முடக்கம்ஆகியவைமுதலீட்டாளர்களைகவலை கொள்ளச்செய்துள்ளன.

அமெரிக்கச் சந்தையில் ஏற்படும் அசைவுகளுக்கு ஏற்ப ஆசியச் சந்தை

கள் ஆடுவதாக நம்பப்படுவதும், அதை யொட்டி கவலை கொண்ட முதலீட்டாளர்கள் பங்குகளை விற்க முனைவதும் இந்தச் சரிவுகளுக்குக் காரணம்.

அமெரிக்க – சீன வர்த்தக உறவில் நீடிக்கும் பதற்றமும், ஃபெடரல் ரிசர்வ் தலைவர் ஜெரோம் பொவெல்லைப் பதவி நீக்கம் செய்ய டிரம்ப் ஆலோசிக்கிறார் என வெளியாகும் செய்திகளும் இந்தப் பதற்றத்துக்கும், அதை ஒட்டிய பங்குச் சந்தை வீழ்ச்சிக்கும் காரணம்.

பங்குச் சந்தைகள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்ததை ஒட்டி நாட்டின் மத்திய வங்கியான ஃபெடரல் ரிசர்வ்தான் அமெரிக்கப் பொருளாதாரத்தின் ஒரே பிரச்சினை என்று டிரம்ப் டிவிட்டரில் தெரிவித்திருந்தார்.

அவர் அதிபரான பிறகு முதல் ஆண்டில் பங்குச் சந்தை கிடுகிடுவென உயர்ந்ததற்குத்தாமே காரணம் என்பதாக டிரம்ப் சித்திரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது

இருப்பதை இல்லாதவர்களுக்கு பகிர பாப்பாண்டவர் வேண்டுகை

கிறிஸ்மஸ் உரையில் அவர் அழைப்பு

வத்திக்கான்,டிசெ.27

இருப்பதை இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து வாழ்வோம் என்று தமது கிறிஸ்துமஸ் தின உரையில் பாப்பாண்டவர் பிரான்ஸிஸ் தெரிவித்தார். கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி வத்திக்கான் நகரில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் பாப்பாண்டவர் பிரான்சிஸ் சிறப்பு பிரார்த்தனை நடத்தினார்.

பல்வேறு நாடுகளை சேர்ந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இதில் கலந்து கொண்டனர். அவர்கள் மத்தியில் பாப்பாண்டவர் பிரான்சிஸ் பேசினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

இன்றைய நாளில் மக்கள் பலரும் அளவுக்கு அதிகமான பொருள்களைச் சேர்ப்பதே வாழ்க்கை எனக் கொண்டு இருக்கிறார்கள். தணிக்க முடியாத பேராசையை கொண்டுள்ளார்கள்.

சிலர் ஆடம்பர உணவுகள் சாப்பிடும் அதே வேளையில் உயிர் வாழ்வதற்கு ரொட்டி துண்டுகள் கூட கிடைக்காமல் பலர் அவதிப்படும் முரண்பாடான சூழல் இன்றும் இருக்கிறது.

கிறிஸ்து பிறந்த இந்த நாள் முதல் புது வழியில் வாழ்வை நடத்துவோம். இருப்பதை இல்லாதவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் வாழ்வாக அது இருக்கட்டும். எளிமை, அக்கறை, அன்புடன் வாழ்வோம். – இவ்வாறு அவர் பேசினார்.

செவ்வாய்க் கோளில் பனிப் பள்ளத்தாக்கு!

ஐரோப்பிய விண் நிலையம் கண்டுபிடிப்பு



ஐரோப்பிய விண்வெளி நிலையத்தினால் செவ்வாய்க்கிரகத்தில் பெரிய பனிப்பள்ளத்தாக்கு இருப்பதற்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோரோலீவ் என பெயரிடப்பட்டுள்ள, 81.4 கிலோ மீற்றர்கள் விட்டம் கொண்ட பகுதியிலேயே இந்த பனிப்பள்ளத்தாக்கு காணப்படுகின்றது. இப்பனிப் பள்ளத்தாக்கின் விட்டமானது சுமார் 2 கிலோ மீற்றர்கள் இருக்கிறது.

இதற்கான ஆதாரங்களை ஐரோப்பிய விண் வெளி நிலையத்தின் மார்ஸ் எக்ஸ்பிரஸ் எனும் விண்கலம் படம் பிடித்து அனுப்பியுள்ளது. இவ்விண்கலம் 2003 ஆம் ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்டிருந்தது. நேற்றுடன் அது விண்வெளிக்குப் புறப்பட்டு 15 வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் அதனைக் கொண்டாடும் முகமாக இந்த அரிய படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

செவ்வாய்க் கிரகத்தில் நிலஅதிர்வுமானி ரோபோ

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா செவ்வாய் கிரகத்தில் புதியரோபோ ஒன்றைத் தரை யிறக்கியுள்ளது. 'தி இன்சைட் ப்ரொப்' (The Insight Probe) எனப்படும் அந்த ரோபோ, செவ்வாய்க் கிரகத்தின் ஆழமான மற்றும் உள் பகுதிகள் குறித்து ஆராய்ச்சி செய்யும் நோக்கத்துடன் அனுப்பப் பட்டுள்ளது.

இன்சைட் ரோபோ சில வாரங்களுக்கு முன்னர் செவ்வாய்க் கிகரத்தில் தரையிறங்கியிருந்தது. இந்த ரோபோ இயந்திரம் செவ்வாய்க் கிரகத்தின் மத்திய ரேகை பகுதிக்கு அருகே உள்ள அலிசிம் பிளானீசியா என்ற பகுதியில் தரையிறங்கியது. இன்சைட் ரோபோ தரையிறங்கிய சில நிமிடங்களில் நிலப்பரப்பின் முதல் படத்தை எடுத்து அனுப்பியது.

தி இன்சைட் ரோபோ தன்னுடன் எடுத்துச்சென்ற நில அதிர்வுமானி (Seismometer) கருவியை செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் வெற்றிகரமாக நிலைநிறுத்தியுள்ளது. நில அதிர்வுமானி என்பது நிலநடுக்கத்தின் வேகம் மற்றும் திறன் ஆகியவற்றை அளக்கும் கருவி ஆகும். இக்கருவியானது செம்பின் நிறத்தில் காணப்படுவதுடன், 1.636 மீற்றர்கள் உயரமுடையதாகவும் இருக்கின்றது. இந்தக்கருவியை நிலைநிறுத்தும் காட்சியையும் இன்சைட் ரோபோ படமெடுத்து அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானின் அரசியல் கட்சியின் முக்கிய உறுப்பினர் சுட்டுக்கொலை!

பாகிஸ்தானின் பிரதான அரசியல் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சையத் அலி ரஸா அபிடி என்ற 46 வயதான அந்த அரசியல் கட்சி உறுப்பினர் அவரது வீட்டின் முன்பாக வைத்து நேற்று முன்தினம் மாலை இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அபிடி, முன்னர் மதச்சார்பற்ற முஸ்லீம் குவாமி இயக்கம் – பாகிஸ்தான் (MQM - P), என்ற அரசியல் கட்சியில் தலைமை யேற்று செயற்பட்டு வந்தார். பின்னர் சில தனிப்பட்ட காரணங்களுக்காக அதிலிருந்து விலகினார்.

இந்தநிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கராச்சியில் பாக் சர்ஸாமீன் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

ரஸா அபிடி காரில் தனது வீட்டிற்கு திரும்பிய போது அடையாளம் தெரியாத இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் வந்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். சம்பவத்தில் படுகாய மடைந்தவர் பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்

தார்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்திற்கு பின்னணியில் என்ன காரணம் உள்ளது என்பது குறித்து விரிவாக கூறுவது கடினம் என்று கராச்சி பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்தக் கொலைக்கான பின்னணி தனிப்பட்ட ஒன்றா, அரசியல் ரீதியானதா அல்லது மதம் சார்ந்ததா என்று அனைத்துகூஷ்; கோணத்திலும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

ஓயும் மோடி அலை; பாயும் ராகுல் அலை!

தி.மு.க. தலைவர் மு. க. ஸ்டாலின் 2019 நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியை பிரதமர் வேட்பாளராகப் பிரகடனப் படுத்தினார்.

மு.க. ஸ்டாலின் தெளிவான ஒரு பார்வையுடன் இந்த முன்மொழிவைச் செய்துள்ளார். சமீபத்தில் நடைபெற்று முடிந்த ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் தெலங்கானா மாநில சட்டப்பேரவை தேர்தல்களின் முடிவுகள் மோடி அலை ஓய்ந்து, ராகுல் அலை வேகமாகப் பாயத் தொடங்கியுள்ளது என்பதையே காட்டுகின்றன.

டிசம்பர் 24, 2018இல் வெளியான 'தி இந்து' ஆங்கில நாளிதழில் வருண் பி.கிருஷ்ணன் தொகுத்து வெளியாகியுள்ள புள்ளிவிவரம் மோடி அலை தணிந்து ராகுல் அலை வேகமாகியுள்ளதைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

நடந்து முடிந்த இந்த நான்கு மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் ஆகியோர் தேர்தல் பரப்புரை மேற்கோண்டார்கள். இதில் நரேந்திர மோடியும், ஆதித்யநாத்தும் பரப்புரை மேற் கொண்ட தொகுதிகளில் பாஜகவின் வாக்குவிகிதம்குறைந்துள்ளதைஇந்துவின் புள்ளிவிவரம் எடுத்துக் காட்டுகின்றன.

ராகுல், மோடி மற்றும் ஆதித்யநாத் பரப்புரை செய்த மொத்த தொகுதிகள்:-

கீழேஉள்ள அட்டவணை மாநிலங்கள் வாரியாக ராகுல், மோடி மற்றும் ஆதித் யநாத் பரப்புரை செய்த தொகுதிகளைக் காட்டுகிறது.

பரப்புரையாளர்	சத்தீஸ்கர்	மத்தியப் பிரதேசம்	ராஜஸ்தான்	தெலங்கானா	மொத்தம்
ஆதித்யநாத்	23	11	26	1	61
மோடி	8	18	26	3	55
ராகுல் காந்தி	19	20	28	8	75

மூவரும் பரப்புரை செய்த தொகுதி களில் வாக்கு விகிதத்தில் ஏற்பட்ட மாற்றம்

கீழே உள்ள அட்டவணை 2013/14 உடன் ஒப்பிடுகையில் வாக்கு விகித மாற்றத்தை காட்டுகிறது.

பரப்புரையாளர்	வாக்கு விகிதம் சரிந்த இடங்கள்	வாக்கு விகிதம் அதிகரித்த இடங்கள்	போட்டியிடாத இடங்கள்
ராகுல் காந்தி	12	58	5
மோடி	46	7	2
ஆதித்யநாத்	50	11	-

ஆதித்யநாத் பரப்புரை செய்த 61 தொகுதிகளில் 50 தொகுதிகளில் (அதாவது 82%) பாஜகவின் வாக்கு வங்கி சரிந்துள்ளது.

நரேந்திர மோடி பரப்புரை செய்த 55 தொகுதிகளில் 46 தொகுதிகளில் பா.ஜ.கவின் வாக்கு விகிதம் சரிந்துள்ளது.

ராகுல் காந்தி பரப்புரை செய்த 75 தொகுதிகளில் 58 தொகுதிகளில் (அதாவது 77%). காங்கிரஸ் கட்சியின் வாக்கு விகிதம் அதிகரித்துள்ளது.

மூவரும் பரப்புரை செய்த தொகுதி களில் வாக்கு வங்கியில் ஏற்பட்ட மாற்றம்

கீழே உள்ள அட்டவணை 2013/14 தேர்தலுடன் ஒப்பிடுகையில் 2018 தேர் தலில் சராசரி வாக்கு வங்கியில் ஏற் பட்டுள்ள மாற்றத்தை எடுத்துக்காட்டுகி றது.

பரப்புரையாளர்	சத்தீஸ்கர்	மத்தியப் பிரதேசம்	ராஜஸ்தான்	தெலங்கானா
ராகுல் காந்தி	2.64	6.79	7.90	22.86
மோடி	-7.20	-3.76	-9.69	-8.64
ஆதித்யநாத்	-8.55	-5.79	-6.06	-16.19

மேற்கண்ட அட்டவணை சத்தீஸ்கரில் ராகுல் பரப்புரை செய்த தொகுதிகளில் காங்கிரஸ் வாக்கு வங்கி 2.64% அதி கரித்துள்ளதையும், மோடி பரப்புரை செய்த தொகுதிகளில் 7.20% சரிந்துள்ள தையும், ஆதித்யநாத் பரப்புரை செய்த தொகுதிகளில் சரிவு 8.55% என்று இருப்பதையும் காட்டுகிறது.

மத்தியப்பிரதேசத்தில் ராகுல் பரப்புரை செய்த தொகுதிகளில் காங்கிரஸ் வாக்கு வங்கி 6.79% அதிகரித்துள்ளதையும், மோடி பரப்புரை செய்த தொகுதிகளில் 3.76% சரிந்துள்ளதையும், ஆதித்யநாத் பரப்புரை செய்த தொகுதிகளில் சரிவு 5.79% என்று இருப்பதையும் காட்டுகி றது.

ராஜஸ்தானில் ராகுல் பரப்புரை செய்த தொகுதிகளில் காங்கிரஸ் வாக்கு வங்கி 7.90% அதிகரித்துள்ளதையும், மோடி பரப்புரை செய்த தொகுதிகளில் 9.69% சரிந்துள்ளதையும், ஆதித்யநாத் பரப்புரை செய்த தொகுதிகளில் சரிவு 6.06% என்று இருப்பதையும் காட்டுகிறது.

தெலங்கானாவில் ஆட்சியைப் பிடிக்க இயலாவிட்டாலும் ராகுல் பரப்புரை செய்த தொகுதிகளில் காங்கிரஸ் வாக்கு வங்கி 22.86% அதிகரித்துள்ளதையும், மோடி பரப்புரை செய்த தொகுதிகளில் 8.64% சரிந்துள்ளதையும், ஆதித்யநாத் பரப் புரை செய்த தொகுதிகளில் சரிவு 16.19% என்று இருப்பதையும் காட்டுகிறது.

ராகுல் பரப்புரையால் காங்கிரஸ் அதி கரித்துக்கொண்ட தொகுதிகள்

அடுத்து உள்ள அட்டவணை ராகுல் காந்தி பரப்புரை செய்த தொகுதிகளில் காங்கிரஸ் அதிகரித்துக் கொண்ட தொகுதி கள் அல்லது இழந்த தொகுதிகளின் விகிதத்தை எடுத்துக் காட்டுகிறது.

அதிகரிப்பு என்பது 2013/2014ல் தோல்வி அடைந்து 2018இல் வெற்றி பெற்ற தொகுதிகள்.

மாநிலம்	அதிகரிப்பு	இழப்பு
சத்தீஸ்கர்	47.37%	15.79%
மத்தியப் பிரதேசம்	35.00%	0.00%
ராஜஸ்தான்	39.29%	0.00%
தெலங்கானா	33.33%	66.67%
மொத்தம்	40.00%	7.14%

இழப்பு என்பது 2013/144இல் வெற்றி பெற்று 2018இல் தோல்வி அடைந்த தொகுதிகள்.

மோடி பரப்புரையால் பா.ஜ.கவிற்கு அதிகரிப்பே இல்லை.

கீழே உள்ள அட்டவணை மோடி பரப்புரை செய்த தொகுதிகளில் பா.ஜ.க தோல்வி அடைந்த தொகுதிகளில் விகி தத்தை எடுத்துக் காட்டுகிறது.

மாநிலம்	அதிகரிப்பு	இழப்பு
சத்தீஸ்கர்	0.00%	37.50%
மத்தியப் பிரதேசம்	0.00%	38.89%
ராஜஸ்தான்	0.00%	61.54%
தெலங்கானா	0.00%	0.00%
மொத்தம்	0.00%	49.06%

மோடி பரப்புரை செய்த தொகுதிகளில் ஒன்றை கூட பாஜகவினால் அதிகரிக்க முடியவில்லை.

மாநிலம்	அதிகரிப்பு	இழப்பு
சத்தீஸ்கர்	8.70%	65.22%
மத்தியப் பிரதேசம்	0.00%	27.27%
ராஜஸ்தான்	3.85%	46.15%
தெலங்கானா	0.00%	0.00%
மொத்தம்	4.92%	49.18%

மேலே உள்ள அட்டவணை ஆதித்ய நாத் பரப்புரை செய்த தொகுதிகளில் பா.ஜ.கவிற்கு ஏற்பட்ட அதிகரிப்பு அல்லது இழப்பு விகிதத்தை காட்டுகிறது.

'தி இந்து' ஆங்கில நாளிதழ் தரும் இந்த புள்ளிவிவரங்கள் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் பிரதமர் வேட் பாளராக ராகுல் காந்தி யை முன்மொழிந்தது சரியான முடிவு என்பதை சந்தேகமற நிரூபிக் கின்றது. ராகுல் ஏறுமுகத் திலும் மோடி இறங்கு முகத்திலும் இருக்கின் றனர். இந்தி பேசும் மாநிலங்க ளின் இதயம் என்று வர்ணிக் கப்படும் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் இந்த நிலை என்றால் நாட்டின் பிற பகுதிகளில் மோடியின் பரப்புரை 2019 தேர்தலில் எடுபடாது என்பதற்கு இது ஒரு முன்னறிவிப்பா கும்.

அரசியல் களத்தில் மோடி ஒரு சிறந்த நடிகர் என்பதை பா.ஜ.க ஆதரவு மாநிலங் களில்வாக்காளர்களே தெளிவாக உணர்ந் துள்ளனர். நரேந்திர மோடியை வீழ்த்தும் வலுவான தலைவர் ராகுல் என்பதே யதார்த்தமான உண்மை என்றும் எனவேதான்அவரை முன் மொழிந்த தில் என்ன தவறு என்று மு.க. ஸ்டா லின்மீண்டும்எடுத் துரைத்துள்ளார். பா.ஜ.கவை வீழ்த்துவதற்கு தி.மு.க தலை வர்மு.க. ஸ்டாலின் முன்மொழிந்தராகுல் காந்தியே வலுவான தலைவர் என்ப தையும் இந்தப் புள்ளிவிவரங்கள் நாட்டுமக்களுக்கு உரக்க எடுத்துரைக்கின் றன.

முல்லைத்தீவில் நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி!

ஆழிப்பேரலையில் காவு கொள்ளப்பட்ட உறவுகளை நினைத்துக் கதறினர் மக்கள்

ஆழிப்பேரலை இடரில் காவு கொள்ளப்பட்ட உறவுகளின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுப் புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றது. மக்கள் கண்ணீர் விட்டுக் கதறியழுது இழந்த தமது உறவுகளுக்கு சுடரேற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

முல்லைத்தீவில் அமைந்துள்ள சுனாமிநினைவாலயத்தில் முல்லைத் தீவு பங்கு சுனாமி நினைவாலய நிர் வாகத்தின் ஏற்பாட்டில் முல்லைத் தீவு பங்குதந்தை அருட்பணி அன் ரன் ஜோர்ச் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை காலை 8 மணி முதல் விசேட ஆராதனைகளும் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

நேற்றுக் காலை இந்துமத வழி பாட்டை இந்துமதகுருவும் இஸ்லாம் மத வழிபாட்டை மௌலவியும் நிகழ்த் தினர். அதனைத் தொடர்ந்து கத்தோ லிக்க மத வழிபாடு யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்பணி. ப.ஜோ. ஜெபரட்ணம் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு இடம்பெற்றது.

இதன்போது மக்கள் தமது உறவுக ளுக்கு கண்ணீர் மல்க மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். (ஐ)

சுனாமியில் உயிர் நீத்த உறவுகளுக்கு யாழ்.பல்கலையில் நேற்று அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ. 27

சுனாமி ஆழிப்பேரலையில் உயிரிழந்த உறவுகளின் 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை காலை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற் றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப் பட்ட இந்த நினைவஞ்சலி நிகழ்வில் பிரதான சுடரை துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், ஊழியர் சங்கத்தினர் மற்றும் மாணவர்கள் தீபங்களை ஏற்றி ஆழிப்பேரலையில் உயிரிழந் தவர்களை அஞ்சலித்தனர். (ஐ – 07)

சுனாமி நினைவு நிகழ்வு கிழக்கிலும் அனுஷ்டிப்பு

ஆழிப்பேரலை இடம்பெற்று 14 அண்டுகள் கடந்துள்ள நிலையில் அதில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் மட்டக்களப்பில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு – கல்லடி, டச்பார், திருச்செந்தூர், நாவலடி ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை 8.55 ம ணியளவில் சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

திருச்செந்தூர் சுனாமி ஞாபகார்த்த நினைவாலயத்தி லும் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

இதன்போது மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையால் விசேட பூசை நடத்தப்பட்டு, ஈகச்சுடர் ஏற்றப்பட்டது. பின்னர் உயிரி ழந்தவர்களின் உறவுகள் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை முதல் வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன், ஆணையாளர் க.சித்திரவேல், கிழக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெட்னம் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

வவுனியாவில் சுனாமி நினைவேந்தல்

'வனுனியா, டிசெ. 27

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள இலங் கையின் முதலாவது சுனாமி நினைவிடத்தில் நேற்று சுனாமி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவு தினத்தில் சுனாமி பேரலை யால் உயிர் நீத்தவர்களுக்கான 2 நிமிட மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது. வவுனியா நகரசபை தலைவர் இ. கௌதமன் நினைவுச்சுடரை ஏற்றினார்.

இதனையடுத்து நிகழ்வுக்கு வருகை தந்தீருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சபை முன்னாள் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் வவுனியா நகர சபை உறுப்பினர்கள், செயலாளர் உட்பட நிகழ்வில் கலந்துகொண்ட பலரும் சுடரேற்றியதுடன் நினைவுத் தூபிக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு வவுனியா பூந்தோட்டம் நரசிங் கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் நிதியுதவியும் வழங்கப் பட்டது. (ஐ – 100)

மன்னாரிலும் நினைவு நிகழ்வு

ஆழிப்பேரலை இடரின் 14ஆம் ஆண்டு நினைவேந் தல் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் ஏற் பாட்டில் மன்னார் பள்ளிமுனை லூசியா மகா வித்தியால யத்தில் நேற்றுக்காலை நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

சுனாமி இடரில் உயிர் நீத்த உறவுகளுக்காக இதன் போது மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. உயிர் நீத்த மக்களுக்காகச் சர்வமத பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மன்னார் மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன், மன்னார் பிரதேச செயலாளர் சிவசம்பு, மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரி வின் உதவிப் பணிப்பாளர் திலீபன், கடற்தொழில் திணைக் கள அதிகாரிகள், கிராம அலுவலர்கள், கிராம மக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு உயிர்நீத்த உறவுகளுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir

ஆரம்பமே அமர்க்களம்

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக் கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின், முதல்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதற்கமைய போட்டியின் முதல்நாளான நேற்று, முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை அணி, ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப் புக்கு 88 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவில், களத்தில் ரொனே சில்வா 15 ஓட்டங்களுடனும், அஞ்சலோ மெத்தியூஸ் 27 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

கிறிஸ்ட்சேர்ச்சில் நேற்று ஆரம்பமான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி, முதலில் களத்தடுப்பை தீர்மா னித்தது.

இதன்படி களமிறங்கிய நியூசிலாந்து அணி, இலங்கை வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 50 ஓவர்களிலேயே 178 ஓட்டங்களுக்குச் சுருண்டது.

அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்க தவற, அதன்பிறகு களமிறங்கிய வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்கு நடையை கட்டினர்.

எனினும் விக்கெட் காப்பாளர் வட்லிங்கின் 46 ஓட்டங்களுடனும், வேகப்பந்து வீச்சாளர் டிம் சவுத்தீயின் 68 ஓட்டங்களுடனும் சற்று வலுப்பெற்ற நியூசிலாந்து அணி, இறுதியில் 178 ஓட்டங்களுக்கு மடிந்தது.

இதன்போது, பந்து வீச்சில் வேகப்பந்து வீச் சாளர் சுரங்க லக்மால் 5 விக்கெட்டுகளையும், லஹிரு குமார 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தி னர்.

இந்த 178 என்ற கௌரவமான ஓட்டங்களை நோக்கி பதிலுக்குக் களமிறங்கியுள்ள இலங்கை அணி, இன்னமும் 6 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டியின் இரண்டாவது நாளை, இன்றைய தினம் தொடங்கவுள்ளது.

(ஐ)

பெய்னுடனான வார்த்தைப் போர் மனம் திறந்தார் விராட் கோஹ்லி

இந்திய மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடை யிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது, டிம் பெய்னுடனான வார்த்தைப்போர் குறித்து விராட் கோஹ்லி மனம் திறந்துள்ளார்.

டிம் பெய்ன் உடனான வார்த்தைப்போர் குறித்து, ஆஸ்திரேலிய ஊடகங்கள் விராட் கோஹ்லியை கடுமை யாக விமர்சித்துள்ளன.

இந்த நிலையில் இதுகுறித்து கோஹ்லியிடம் கேட்கப் பட்டது. இது குறித்து அவர் கூறிய கருத்துக்கள் இவை,

“என்னை மக்கள் விரும்பவேண்டும் என்பதற்காக நான் என்ன செய்கிறேன், நான் என்ன நினைக்கிறேன் என்ப தைப் பற்றி கூறுவதற்கு நான் எப்போதும் வெளியே சென் றாலும் கையில் பதாதை வைத்துக் கொண்டு செல்ல முடி யாது. இதைத்தான் நான் வெளியே செல்லும்போது செய் கிறேன். என்னுடைய நோக்கம் போட்டியில் வெல்வது, அணிக்காகச் சிறப்பாக விளையாடுவது என்பதுதான்.

என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன எழுதுகிறார்கள், கருத்து வைத்திருக்கிறார்கள் எனத் தெரியாது. என் மீது அக்கறையுடன் கூட அந்த கருத்து வைக்கப்பட்டு இருக் கலாம். ஒவ்வொருவரும் அவர்கள் பார்வையில் இருந்து கருத்து கூறுவார்கள். நான் அதற்கு மதிப்பு அளிக்கிறேன். என்னுடைய நோக்கம் அனைத்துமே நல்ல கிரிக்கெட் விளையாட வேண்டும், வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்பது மட்டுமே.

என்னை இந்தத் தொடரில் ஆஸ்ரேலிய ஊடகங்கள் வில்லனாகச் சித்தரித்தாலும் எனக்குக் கவலையில்லை. என்னுடைய பயிற்சியாளர் என்னுடன் அதிக நேரம் செலவிடுவதால், என்னைப் பற்றி அவருக்குத் தெரியும். என்னைப் பற்றித் தெரிந்தவர்களிடம் என்னைப்பற்றி கேளுங்கள். ஆதலால், ஆஸ்திரேலிய ஊடகங்கள் எழுப் பிய விமர்சனத்திற்கு நானாகவே பதில் அளிக்கத் தேவை யில்லை.

எனக்கும் பெய்னுக்கும் களத்தில் வாக்குவாதம் நடந்தது. அது நடந்து முடிந்த கதை. சர்வதேச அளவில் உயர்ந்த அளவிலான போட்டியில் இரு அணிகளும் விளையாடி வருகின்றன. அப்போது, இதுபோன்ற சம்பவங்கள் களத்தில் நடக்கலாம். ஆனால், அதைக் கடந்து விட்டு அடுத்த போட்டிக்கு சென்றுவிட வேண்டும்.

நாங்கள் இருவரும் வரம்பு மீறிப் பேசவில்லை, இரு வருக்கும் இடையே எந்த விதமான பிரச்சினையும் இல்லை. என்ன நடந்தது என்று எனக்கும், பெய்னுக்கும் தெரியும். எதையும் அவசியமில்லாமல் இருவரும் செய்யவில்லை. மக்கள் பார்க்கும் வகையில் நல்ல வகையான கிரிக்கெட் போட்டியை விளையாட இருவரும் விரும்புகிறோம்” – என கூறியுள்ளார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி தற்போது, மெல்பேர்னில் நடைபெற்று வருகின்றது.

ரொனால்டோவின் கிறிஸ்மஸ்

பிரபல உதைபந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, கிறிஸ்மஸை முன்னிட்டு தனது குழந்தைகளுக்கு கிறிஸ்மஸ் தாத்தா உடை அணிவித்த குடும்ப புகைப்படத்தை வெளியிட் டுள்ளார்.

உலகின் தலைசிறந்த உதைபந்து வீரரான ரொனால்டோ தனது குடும்பத்தினருடன் கிறிஸ் மஸ் கொண்டாட்டத்தைத் தொடங்கியுள்ளார்.

தனது காதலி ஜோர்ஜினா ரோட்ரிகஸ், குழந் தைகள் அலனா, ஈவா மரியா, கிறிஸ்டியானோ ஜூனியர் மற்றும் மட்டியோ ஆகியோருடன் ரொனால்டோ எடுத்துக் கொண்ட புகைப்படத்தை டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இதில் ரொனால்டோவும், ஜோர்ஜினா மற்றும் கிறிஸ்டியானோ ஜூனியர் மூவரும் தலையில் கிறிஸ்மஸ் தாத்தா தொப்பி அணிந்துள்ளனர். மற்ற மூன்று குழந்தைகள் கிறிஸ்மஸ் தாத்தா உடையில் உள்ளனர். அவர்களின் பின்புறத் தில் கிறிஸ்மஸ் மரம் அலங்கரிக்கப்பட்டுள் ளது.

அட்லான்டா யுனைட்டெட் அணியின் பயிற்சியாளராக பிராங்க் டி போயர்

அமெரிக்காவில் உள்ள பிரபல உதைபந்து கழக அணியான அட்லான்டா யுனைட்டெட் அணி யின் பயிற்சியாளர் பொறுப்பை, பிராங்க் டி போயர் ஏற்றுள்ளார்.

அணியை முன்னோக்கி நகர்த்தும் ஓர் முன் னேற்ற படியாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னதாக அணியின் பயிற்சியாளராக இருந்த ஜெரார்டோ மார்டினோ, டிசெம்பர் 10ஆம் திகதியுடன் தனது பதவிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அதன் பின்னணியில் தற்போது புதிய பயிற் சியாளராக பிராங்க் டி போயர், நியமிக்கப்பட்டுள் ளார்.

ஜெரார்டோ மார்டினோ, அமெரிக்காவில் நடை பெறும் பிரபல தொடரான மேஜர் லீக் உதைபந்து தொடரில், அட்லான்டா யுனைட்டெட் அணி, நடப்பு ஆண்டு சம்பியன் பட்டம் வென்றதற்கு மிக முக்கிய காரணமாக திகழ்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக் கது.

அவரின் பயிற்சியின் கீழேயே இந்தச் சம்பியன் கிண்ணம் வெல்லப்பட்டதால், அட்லான்டா யுனைட் டெட் அணி வரலாற்றில், அவரின் பெயர் முக்கியத் துவம் பெறுகின்றது.

அட்லான்டா யுனைட்டெட் உதைபந்து கழக அணி, தற்போது, வட, தென், அமெரிக்க நாடுகளை சேர்ந்த கழகங்கள், கரீபியனைச் சேர்ந்த கழகங் கள் பங்கேற்கும் கொன்ககேப் உதைபந்து தொடரில் விளையாடவுள்ளது.

இந்த தொடரில் இருந்தே பிராங்க் டி போயர் தனது பணியை தொடருவார் என கூறப்பட்டுள்ளது.

48 வயதான பிராங்க் டி போயர் இதற்கு முன்னதாக, அஜக்ஸ் இளையோர் அணி, இண்டர் மிலான், கிறிஸ்டல் பேலஸ் ஆகிய கழக அணிக ளுக்குப் பயிற்சியாளராகச் செயற்பட்டுள்ளார்.

அதேபோல, தனது சொந்த நாட்டு அணியான நெதர்லாந்து அணிக்காகவும், 2008ஆம் ஆண்டு தொடக்கம், 2010ஆம் ஆண்டு வரை துணைப் பயிற்சியாளராகப் பணியாற்றியுள்ளார்.

நெதர்லாந்து தேசிய உதைபந்து அணியில், 1990ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை தடுப்பாளராக விளையாடிய பிராங்க் டி போயர் , 112 போட்டிகளில் விளையாடி 13 கோல்களை அடித்து அணிக்காக தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

50 நாள்களுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்காக வீடுகளை அமைப்பதற்கு, வீடமைப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்ட 260 கோடி ரூபா இந்தக் காலகட்டத்தில் திறை சேரிக்குத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளது எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

அடுத்த ஒரு ஆண்டு காலப் பகுதியில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து பணியாற்ற வேண்டும்.

2015இல் இரண்டு பேரும் இணைந்து பணியாற்றுவதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ள னர். இது இரட்டை அதிகாரம். யாரும் தனி ஆதிக்கம் செலுத்த முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

ஆழிப்பேரலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்நீத்த உறவுகளுக்காக நேற்றும் காலை 09.25 தொடக் கம் 09.27 வரை இரண்டு நிமி டங்கள் மௌன அஞ்சலி செலுத் தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அனர்த் தத்தில் காவுகொள்ளப்பட்ட உறவு களின் கல்லறைகளுக்கு அவர் களின் சொந்தங்கள் சுடர் ஏற்றினர். அவர்கள், கல்லறைகளைக் கட்டி யணைத்து கதறியழுதனர்.

ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து நேற்றுடன் 14 ஆண்டு கள் கடந்துவிட்டாலும் அந்தப் பேரவலம் ஏற்படுத்திவிட்ட வலி களிலிருந்து இன்னமும் மக்கள் மீளவில்லை என்பதற்கு இந்தக் கண்ணீர் கதறல் காட்சி சான்றாக அமைந்தது.

வடமராட்சி கிழக்கில்

வடக்கில் யாழ். மாவட்டத்தில் அதிக உயிர்கள் காவுகொள்ளப் பட்ட வடமராட்சி கிழக்கில் பிரதான நிகழ்வு நடைபெற்றது.

அங்கு அமைந்துள்ள உடுத் துறை சுனாமிப் பொது நினை வாலயத்தில் நேற்றுக் காலை பொதுமக்கள், அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் ஒன்று கூடி மௌன அஞ்சலி செலுத்தி னர்.

இந்த நினைவேந்தல் நிகழ் வில் பொதுச்சுடரைப் பருத்தித் துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கன கேஸ்வரன் ஆகியோர் இணைந்து ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து ஆழிப் பேரலையில் உயிரிழந்த உறவு களுக்குச் சம நேரத்தில் அவர் களின் சொந்தங்களினால் சுடரேற் றப்பட்டது.

முன்னதாக, ஆழிப்பேரலை யில் சிக்குண்டு வடமராட்சி கிழக் கின் ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாளையடி ஆகிய இடங்களில் உயிர்நீத்த உறவுகளின் பெயர் கள் பொறிக்கப்பட்ட நினைவுச் சுவர் திரைநீக்கம் செய்து வைக் கப்பட்டது.

இதனை முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.கே.சிவாஜி லிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த நினைவேந்தல் நிகழ் வில் உயிர்நீத்த உறவுகளுக்கு அவர்களின் சொந்தங்கள், அரச அதிகாரிகள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூ ராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் என ஆயிரக்கணக் கானோர் கலந்துகொண்டு சுடரேற்றி – மலர் மாலை அணி வித்து அஞ்சலி செலுத்தினர்.

குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பத்தலைவர் நேற்று மாலை குளத்துக்குக் குளிக்கச் சென்றுள் ளார். அவரைக் காணவில்லை என உறவினர்கள் தேடியுள்ளனர்.

இந்த நிலையில் அவர் நேற்று நண்பகல் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார். (ஐ-07)

சு.கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவுடன் இணைந்து போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்திருப்பதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறி யிருந்தநிலையிலேயே, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், அரசியல் கூட்டணியை அமைப்பதற்கான கதவை நாங் கள் திறந்தே வைத்துள்ளோம். ஆனால், இன்னமும் எவருடனும் உடன்பாடுஏதும்எட்டப்படவில்லை.

தேர்தல் அறிவிக்கப்பட்டதும், கூட்டணியில் இணைந்து செயற் படவிரும்பும்தரப்புகளுடன் பேச்சு நடத்துவோம்.

எனினும், அந்தக்கூட்டணிக்கு ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவே தலைமை தாங்கும். அத்துடன், அந்தக் கூட்டணிதாமரை மொட்டு சின்னத்தில்தான் போட்டியிடும் – என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் இந்தத் திடீர் அறிவிப் பால்ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேனகடும்குழப்பத்தில் உள்ளார் எனவும், சு.கவின் அதி ருப்தியாளர்கள் ரணில் அரசுடன் கைகோர்க்க இந்த அறிவிப்பு சாதகமாக அமையக்கூடும் எனவும் பிந்திய தகவல்கள் தெரி வித்தன. (ஐ)

வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணைமடுக்குளத்துக்கான நீர் வரத்துஅதிகரித்துள்ளது.அதனால் 9 வான்கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக வரத்து நீர் வெளியேற் றப்பட்டு வருகின்றது.

தற்போது இரணைமடுக்குளத் தின் நீர் மட்டம் 35 அடி 11 அங் குலமாகக் அதிகரித்துக் காணப் படுகின்றது.

தொடரும் மழை காரணமாக நீர் வரத்து அதிகரித்துள்ளமை யால் இரணைமடுக்குளத்தின் 9 வான்கதவுகள் திறக்கப்பட்டன. அதில் 5 வான் கதவுகள் 1.5 அடியாகவும் 4 வான்கதவுகள் 6 அங்குலமாகவும் திறக்கப்பட்டுள் ளன.

இரணைமடுக்குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள் ளமையால் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட கிராமங்களின் மக்களை மிகவும் அவதானமாக இருக்கு மாறு கோரப்பட்டுள்ளது.

கடந்தசிலநாட்களாகப்பெய்த கனமழை வெள்ளப்பெருக்குக் காரணமாக பல கிராமங்களின் மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந் துள்ள நிலையில் மீண்டும் தொடரும் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள் ளது.

மீண்டும் மழை பெய்ய ஆரம் பித்துள்ளதால், மக்கள் இடைத்தங் கல் முகாம்களுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர். (ஐ)

நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு வருகை தரவுள்ளார் எனக் கிளி நொச்சி மாவட்டச் செயலகத் தக வல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சிக்கு வரும் பிரத மர் மாவட்ட செயலகத்தில் நடை பெறவுள்ள உயர்மட்டக் கூட்டத் தில் பங்கேற்கவுள்ளமையுடன் இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல்முகாம் களுக்கும் செல்லவுள்ளார் எனத் தெரிய வருகின்றது. (ஐ)

விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஹ்மான், ஆசு மாரசிங்க, மரிக் கார் ஆகிய மூவரும் விரைவில் பதவியேற்பார்கள் என்றும் –

இன்று நடைபெறும் ஐக்கிய தேசியக்கட்சியின் மத்தியசெயற் குழுக் கூட்டத்தில் இது குறித்து இறுதி முடிவெடுக்கப்படும் என் றும் அறியமுடிகின்றது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் இரா ஜாங்க மற்றும் பிரதியமைச்சர் களாக 40 பேரை நியமிக்கமுடி யும். அண்மையில் சிலருக்குப் பதவிகள் வழங்கப்பட்டாலும் இழுபறி காரணமாக ஏனைய சிலருக்கு வழங்கப்படவில்லை.

அந்தப் பட்டியலிலேயே மேற் படி மூவரின் பெயர்களும் உள்ள டங்கியிருப்பதாகத் தகவல் வெளி யாகியுள்ளது.

பிரதமர் பதவியில் இருந்து ரணில்விக்கிரமசிங்கவை ஜனாதி பதி நீக்கிய பின்னர், இவர்கள் மூவரும் வெளிப்படையாகவே ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சித்தனர்.

ஜனாதிபதியின் மகளால் எழு தப்பட்ட நூல் குறித்தும் பல கோணங்களில்விமர்சனங்களை முன்வைத்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

ஜனாதிபதியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டிக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அவர், அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந் தித்து ஆசிபெற்றார்.

அத்துடன், சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் மகாநாயக்க தேரர்களுடன் கலந் துரையாடினார்.

அதன்பின்னர் ஊடகங்களி டம் கருத்து வெளியிட்ட அவர், சட்டம், ஒழுங்கு அமைச்சு என்னிடம் இருந்தபோது 'பிரமுகர் கள் கொலை சூழ்ச்சி' தொடர்பில் சுயாதீன விசாரணை முன் னெடுக்கப்பட்டது. எனக்கு தெரிந் தளவில், ஜனாதிபதியைக்கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட வில்லை. என்று குறிப்பிட்டார்.

மகாநாயக்கதேரர்களுடனான சந்திப்பின்போதும் அமைச்சர் மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டி னார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன மற்றும் பாதுகாப்பு அமைச் சின் முன்னாள் செயலாளர் கோட் டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பத்தைக் கொலைசெய் வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டது.

இதன்பின்னணியில் பயங்கர வாத தடுப்பு விசாரணைப் பிரி வுக்கு பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா தொடர்புபட்டுள்ளார் என்று நாமல் குமார என்பவர் தகவல் வெளியிட்டார்.

இதையடுத்து இவ்விவகாரம் தொடர்பில் அரசியலில் பெரும் சர்ச் சையை ஏற்படுத்தியது. ஆட்சி மாற்றத்துக்கும் வித்திட்டது என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

எதிர்க்கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்கால அரசியல் நடவடிக் கைகள் குறித்து கருத்து தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

இன்று இந்த நாட்டில் பொறுப் புக்கூறக்கூடிய தலைமைத்துவம் ஒன்று இல்லாது போய்விட்டது. ஜனாதிபதி – பிரதமர் இடையில் முரண்பாடுகள் நிலவுகின்றன. ஜனாதிபதி சொல்வது ஒன்று செய் வது வேறொன்று. பிரதமர் நாட்டின் குற்றவாளிகளைக் காப்பாற்ற வேண்டும்என்றஒரேநோக்கத்தில் ஆட்சி நடத்தி வருகின்றார்.

பலமான எதிர்க்கட்சி என கூறிக்கொண்டு செயற்படும் எவ ரும் உறுதியாக இல்லை. அவர் களும் அதிகார மோகத்தில் மாத் திரமே செயற்பட்டு வருகின்றனர். மஹிந்த ராஜபக்ஷ அணியினர் எந்த நேரமும் அவர்களுக்கு ஏதேனும் பதவி கிடைக்க வேண் டும் என்ற ஒரே நோக்கத்தில் மட் டுமே செயற்பட்டு வருகின்றனர்.

நாடாளுமன்றத்தில் சட்ட விரோதமாக பிரதமர் பதவியைக் கைப்பற்றினர். அதுபறிபோனதும் இன்று எதிர்க்கட்சித் தலைவர் பதவியைகைப்பற்றிநாடாளுமன் றத்தை ஆக்கிரமிக்க முயற்சித்து வருகின்றனர். கடந்த சிலநாடாளு மன்ற அமர்வுகளின் போதெல் லாம் அவர்கள் எதிர்க்கட்சித்தலை வர் தொடர்பான நோக்கத்தில் மட் டுமே செயற்பட்டு வந்தனர்.

அதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தனை காலம் எதிர்க்கட்சிஅதிகாரத்தில்இருந்தது. ஆனால் பிரதான எந்தவொரு பிரச்சினையையும் அவர்கள் கையாளவில்லை. மாறாக வடக் கின்ஒருசிலஅரசியல்பிரச்சினைகள் குறித்து மட்டுமே பேசினார்கள்.

ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் ஆறு நாடாளு மன்ற உறுப்பினர்களும் எதிர்க் கட்சியின்உண்மையானபொறுப் பைச் சரியாக செய்து வருகின் றோம். மக்களின் நேரடியான பிரச்சினைகள் குறித்து மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே

சண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போலிக் காசோலையை வழங்கி மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய் யப்பட்டார் என்றும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மோசடியில் ஈடுபட்ட மேல்மாகாணசபைஉறுப் பினர் சண்.குகவரதனின் கட்சி உறுப்புரிமையைநீக்கியுள்ளதாக ஜனநாயகமக்கள்முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஊட கங்களுக்கு அறிவித்துள்ளார்.

இழுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனையின் பிரகாரமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட் டுள்ளது எனத் தகவல் வெளியாகி யுள்ளது.

தென்னிலங்கையின்பிரதான இருஅரசியல்கட்சிகளுள்ஒன்றாக விளங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இன்று மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மைத்திரிபால சிறிசேனவிடம் கட்சித் தலைமை சென்றபிறகே இந்தப்பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது கட்சிக் குள் மோதல் வெடித்துள்ளது. மூன்றுக்கும் மேற்பட்ட அணிகள் உதயமாகியுள்ளன. கட்சியைமீட் டெடுப்பதற்காகசந்திரிகாஅம்மை யாரும் களமிறங்கியுள்ளார்.

இவ்வாறானதொருபின்புலத்தி லேயே கட்சித் தலைமையகம் மூடப்பட்டுள்ளது. எனினும், இது தொடர்பில் சு.க. தரப்பிலிருந்து இன்னும்உத்தியோகப்பூர்வமாக எவ்வித தகவலும் வெளியாக வில்லை. (ஐ)

கலந்துரையாடி அரசுக்கு அழுத் தம் கொடுத்து வருகின்றது.

ஆகவே எமக்கு அங்கீகாரம் இல்லாது போனாலும் கூட இன் றும் உண்மையான எதிர்க்கட்சி நாம் தான். மக்கள் எமது கொள் கையை, நிலைப்பாட்டை ஆதரித்து மக்களின் மூலமாகவே அதி காரத்தை வழங்கும் வரையில் எமது போராட்டம் ஜனநாயக ரீதி யில் முன்னெடுக்கப்படும் – என் றார். (ஐ)

நாடாளுமன்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன தெரிவித்துள்ளார்.

மஹிந்தவை எதிர்க்கட்சித் தலைவராகஏற்றுக்கொள்ளவேண் டாம் என, சுமந்திரன் ஜரோப்பிய மற்றும், ஐ.நா சபையிடம் கோரி யுள்ளதன் மூலம், அதற்கான சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பி லேயே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில் –

மஹிந்தவை, எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ள வேண்டாம் என, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஜரோப் பிய ஒன்றியத்திற்கும், ஐ.நா. சபைக்கும் அவசரக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இது இலங்கையின்உள்ளகப் பிரச்சினை. எதிர்க்கட்சித் தலை வரை நாடாளுமன்றமே தெரிவு செய்யும். நாடாளுமன்றில் கடந்த முறை நடத்தப்பட்ட வாக்கெடுப் பில் அரசாங்கத்திற்க 102 உறுப் பினர்களின் ஆதரவே இருந்தது.

மஹிந்தவை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொண்டு செயற்பட நாடாளுமன்றின் பல கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. ஆனாலும் சுமந்திரன் இவ்வாறு கடிதம் எழுதுவது அரசுக்கு ஒத்துப்போகும் எதிர்க்கட்சியை உருவாக்கவே.

அரசுக்குச்சார்பானஎதிர்க்கட்சி அமைந்தால், அவர்கள் எதிர்ப் பார்க்கும் அரசமைப்பை அவர் களினால் கொண்டு வரமுடியும். இதுதான் அவர்களின் முதல் முயற்சி.

எங்கள் நாட்டின் நாடாளு மன்றப்பிரச்சினைக்கு, ஜரோப்பிய மற்றும், ஐ.நா. சபை எவ்வாறு தலையிடமுடியும் என்று எனக்கு தெரியவில்லை.

அரசியல்வாதியாக நாம் ஏனைய நாடுகளின் எதிர்க்கட்சித் தலைவர் குறித்து தனிப்பட்ட விதமாகத் தொடர்பு கொண்டா லும், நாடாளுமன்றவிடயங்களில் தலையிடுவதில்லை.

ஆனால் இங்கு நாடாளுமன் றத்திற்குள்ளும், ஜரோப்பிய மற் றும், ஐ.நா சபை தலையிடவேண் டும் என்று கோரியுள்ளனர் – என் றார். (ஐ)

சு.கவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்த்தவோ முடியாது என நாடா ளுமன்ற பைஸர் முஸ்தபா தெரி வித்துள்ளார்.

எவ்வாறான நிலைமை ஏற் படினும்அதனைக்கட்சியில்உள்ள அனைவரும் நெருக்கடிகளை ஒன்றிணைந்து தகர்ப்போம் என வும் அவர் குறிப்பிட்டார்.

ராஜகிரியவில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

அரசியல் ரீதியில் இன்று காணப்படும் அனைத்து நெருக் கடிகளையும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும்ஒன் றிணைந்தே வெற்றி கொள்ள வேண்டும்.

அத்தோடுஜக்கியமக்கள்சுதந் திரக் கூட்டமைப்பின் பிரதான கடமை சுதந்திரக் கட்சியைப்பலப் படுத்துவதே ஆகும்–என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir

கர்த்தர் சொரூபம் உடைப்பால் மன்னாரில் பெரும் பரபரப்பு!

மன்னார், டிசெ. 27

மன்னாரில் 40 வருடங்கள் பழமை வாய்ந்ததும் முக்கியத்துவம் மிக்கதுமான கர்த்தர் சொரூபம் இனந்தெரியாதவர்களால் உடைக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட் பட்ட ஆட்காட்டி வெளிபங்கு, ஆட்காட்டி வெளி – பருப்புக் கடந்தான் பிரதான வீதியில் அமைக்கப்பட்டிருந்த புனித கர்த்தர் சொரூபமே நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நள்ளிரவு இனந்தெரியாதவர்களினால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியூடாக கரோல் நிகழ்வில் கலந்து கொண்டு, மீண்டும் அவ்வீதியூடாக பங்கு மக்கள் சென்று கொண் டிருந்தபோதே சொரூபம் உடைக்கப்பட்டிருந்ததை கண்டுள் ளனர். அதனைத் தொடர்ந்து அருட்தந்தை ச.சத்தியராஜ் அடிகளாரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற அருட்தந்தை, அதனை அவதானித்ததுடன், அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்தார்.

நேற்றுக் காலை சம்பவ இடத்துக்குச் சென்ற அடம் பன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட துடன் விசேட தடவியல் நிபுணத்துவப் பொலிஸாரும் அவ்விடத்துக்குச் சென்று தடயங்களை பெற்றுக் கொண்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப் பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமெனப் பிரதேச மக்களும், கத்தோலிக்க சமூகத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

விமானமொன்றில் தீ!

கொழும்பு, டிசெ. 27

மத்தள விமான நிலையத்தில் விமானமொன்றில் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சி.வீ.கே. 7042 என்ற விம ானத்திலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விமானம் பறப்பதற்கு தயாராகவிருந்த நிலையில் திடீரெனத் தீ ஏற்பட்டதாகக் கூறப் படுகின்றது.

எவ்வாறாயினும் தீயணைப் புப் பிரிவினர் அதனை உடனடி யாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும், இதனால் எவருக் கும் பாதிப்பு ஏற்படவில்லை யெனவும் விமான நிலையத்தக வல்கள் தெரிவித்தன.

விமானத்தில் 7 பணியாளர் கள் மாத்திரமே அதன்போது இருந்துள்ளனர். (ஐ)

கடுகண்ணாவையில் புத்தர் சிலை உடைப்பு

ஒருவர் பொலிஸாரால் கைது

கடுகண்ணாவை, திதுருவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள புத்தர் சிலை ஒன்றை உடைத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மாவனல் லைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனல்லைப் பிரதேசத்தை சேர்ந்த எம்.அஷ்பர் என்ற நபரே இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாகவே மாவ னல்லை பிரதேசத்தில் காணப்படும் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகியி ருந்தன.

இந்நிலையிலேயே நேற்று அதி காலை 4 மணியளவில் திதுருவத்தை பிரதேசத்தில் இருவர் புத்தர் சிலை யைச் சேதமாக்குவதை அவதானித்த அந்தப் பிரதேச இளைஞர் ஒருவர், இருவரையும் மடக்கிப் பிடிக்க முயற்சி செய்துள்ளார். அதில் ஒருவர் தப்பி யோடியுள்ளார் எனத் தெரிவிக்கப்ப டுகிறது.

தப்பியோடியவரைக் கண்டுபிடிக்க தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக மாவனல்லை பொலி ஸார் மேலும் கூறினர். (ஐ)

ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சி!



கொழும்பு, டிசெ. 27

இலங்கை ரூபாவின் பெறுமதி மீண்டும் வீழ்ச்சியடைந் துள்ளது.

அதன்படி இலங்கை மத்திய வங்கியினால் வெளி யிடப்பட்டுள்ள அமெரிக்க டொலர் ஒன்றுக்கான விற் பனை மற்றும் கொள்வனவு பெறுமதிப்படி இலங்கை ரூபாவின் பெறுமதி 183.17 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அண்மையில் அதிகரித்திருந்த நிலையில் நேற்று மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

வெள்ளத்தால் வீதிகள் கடும் சேதம்

கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிரதான போக்கு வரத்துப்பாதைகள் கடுமையாகச் சேதமடைந்து காணப்படுகின்றன.

வடக்கில் நிலவிய சீரற்ற காலநிலை காரண மாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு வீதிகள் பெருமளவு சேதமடைந் துள்ளன.

வீதிகள் முழுமையாக அரிக்கப்பட்டு பாரிய குழிகளாகவும் ஆபத்து நிறைந்த பகுதியாகவும் காணப்படுகின்றன. அந்த வீதிகளை உடனடியாக புனரமைக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

அமைச்சரின் உறுதிமொழியையடுத்து

போராட்டத்தைக் கைவிட்டனர் ரயில்வே தொழிற்சங்கத்தினர்

கொழும்பு, டிசெ. 27

ரயில் சாரதிகள், காவலர்கள், ரயில் நிலையதி பர்கள், கட்டுபாட்டாளர்கள் மற்றும் மேற்பார்வை முகாமையாளர்கள் நேற்று நள்ளிரவிலிருந்து முன் னெடுக்கத் திட்டமிட்டிருந்த 48 மணிநேர பணிப்புறக் கணிப்பு தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் நேற்று முன் தினம் பிற்பகல் எடுக்கப்பட்டதாக ரயில் சாரதிகள் சங்கத் தின் பிரதான செயலாளர் இந்திக தொடங்கொட தெரி வித்தார்.

தமது பிரச்சினைகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர் ஜுன ரணதுங்க மற்றும் ரயில் தொழிற்சங்கங்களுக் கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து, ஒரு மாத காலத்துக்குள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதாகக் கடிதம் மூலம் அமை ச்சர் வாக்குறுதி வழங்கியதால் தாம் முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்த பணிப்புறக்கணிப்பைக் கைவிட்ட தாகவும் அவர் கூறினார். (ஐ)

உயர்தரப் பரீட்சையின் பெறுபேறு இவ்வாரம்

கொழும்பு, டிசெ. 27

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை வெளியிடப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், அந்தப் பணி கள் நிறைவடைந்த பின்னர் பெறுபேறுகள் வெளியிடப் படுமெனவும் பரீட்சைத் திணைக்களத்தின் அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சை யில் நாடு முழுவதும் 3,21,000 மாணவர்கள் தோற்றி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

மக்கள் அபிப்பிராயம் பெற பொதுஜன பெரமுன முடிவு

கிராமம் கிராமமாக சென்று பொதுமக்களின் கருத்துக்களைகேட்டறியும்தேசியவேலைத்திட்டமொன்றை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாரித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் ஜனவரி முதல் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனையின்படி இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அந்தக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். (ஐ)

குளவிக்கொட்டுக்கு இலக்காகி அளவெட்டியில் 14 பேர் காயம்

அளவெட்டி பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 14 பேர் காயமடைந்ததுள்ளனர்.

அளவெட்டி, அம்பானை பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற் றுள்ளது.

காயமடைந்த 14 பேரும் தெல்லிப்பளை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப் பகுதியிலுள்ள வெற்றுக்காணியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த சிலர் அங்கிருந்த பற்றைகளை வெட்டியுள்ளனர். இதன்போது அதிலிருந்த குளவிக் கூடொன்று கலைந்து, துப்புரவுப் பணியில் ஈடுபட்டு இருந்தவர்கள் மற்றும் வீதியால் சென்றவர்களை துரத் திக் கொட்டியதில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

நால்வர் சிகிச்சையின் பின் வீடு திரும்பிய நிலையில் ஏனைய 10 பேருக்கும் வைத்தியசாலையில் தொடர்ச்சி யாகச் சிகிச்சை பெறுகின்றனர் எனக் கூறப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.